# புதிய ஜனநாயகம்

பிப்ரவரி 2017
ரூ. 15.00



## மிக்சர் பன்னீரா?
## மிஸ்டர் பன்னீரா?

# போலீசு ராஜ்ஜியம்!
# எழுந்து நின்ற தமிழகமே, எதிர்த்து நில்!

மாணவர்கள் முன்னெடுத்த ஜல்லிக்கட்டுப் போராட்டத்தை, உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரத் துடித்த மோடி அரசின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே, கடந்த ஜனவரி 23-ஆம் தேதியன்று மெரினாவில் எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது தமிழக போலீசு.

பின்லேடன் படத்தை வைத்திருந்தனர், ஜனவரி 26-ஐ கருப்பு நாளாக அனுசரிப்போம் என அட்டை வைத்திருந்தனர், தீவிரவாத சக்திகள் ஊடுருவிவிட்டனர் - என்றெல்லாம் புளுகி, போராடிய மக்கள்அனைவரையும் தாக்கியதற்கு நியாயம் கற்பிக்கிறது போலீசு. ஆனால், போலீசின் வன்முறை வெறியாட்டமானது, ஏற்கெனவே திட்டமிடப்பட்டதுதான். போராடிய மாணவர்கள் போலீசின் கொலைவெறித் தாக்குதலிலிருந்து தப்பித்து அருகிலுள்ள மீனவர் குடியிருப்பான நடுக்குப்பத்தில் தஞ்சமடைந்தபோது, அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த குற்றத்துக்காக அப்பகுதிவாழ் மக்களைக் கொடூரமாகத் தாக்கியது போலீசு. யாராவது பார்த்து விடுவார்களோ என்ற அச்சமே இல்லாமல், எளிதில் தீப்பற்றும் வெள்ளை பாஸ்பரசைத் தூவி ஒரு பெண் போலீசு நடுக்குப்பத்தில் வீடுகளையும் ஆட்டோக்களையும் மீன் மார்க்கெட்டையும் தீயிட்டுக் கொளுத்த, மற்ற போலீசார் வாகனங்களையும் கண்ணில்பட்டவர்களையும் அடித்து நொறுக்கியுள்ளனர்.

போலீசின் வன்முறை வெறியாட்டத்தை எதிர்த்து சென்னை வடபழனியருகே நடந்த சாலை மறியல் போராட்டத்தை வேடிக்கை பார்த்த சில பள்ளிச் சிறுவர்களின் முகங்கள் அப்போது எடுக்கப்பட்ட போலீசுத் துறையின் புகைப்படங்களில் இருந்ததாகக் கூறிக்கொண்டு, நள்ளிரவில் வீடு வீடாகப் புகுந்து இம்மாணவர்களைப் போலீசார் கைது செய்து, கொலை முயற்சி உள்ளிட்ட கடுமையான பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்து அவர்களது எதிர்காலத்தையே நாசமாக்கியுள்ளனர்.

பல்வேறு பரிசுகளையும் பதக்கங்களையும் பெற்றுள்ள தமிழகத்தின் பெருமைக்குரிய நீச்சல் விளையாட்டு வீரரான பிரேம்நாத், ரயில்வே துறையில் பணியாற்றுகிறார். போலீசின் அடக்குமுறையால் மெரினாவிலிருந்து அருகிலுள்ள அயோத்தியா குப்பத்திற்கு மாணவர்களும் இளைஞர்களும் தப்பியோடியபோது, அப்பகுதியில் குடியிருந்த பிரேம்நாத் வீட்டின் கதவை உடைத்து, அவரை மிருகத்தனமாகத் தாக்கி அவர் கையை உடைத்து, இனி நீந்தவே முடியாமல் செய்திருக்கிறது தமிழகப் போலீசு. கொலை முயற்சி உள்ளிட்டு அவர் மீது பதினோரு பிரிவுகளின்கீழ் பொய்வழக்கு சோடிக்கப்பட்டுள்ளதால், அவரது எதிர்கால வாழ்வே சிதைக்கப்பட்டுள்ளது.

வன்முறை வெறியாட்டம், கல்வீச்சு, கண்ணீர்புகை, தீவைப்பு, சித்ரவதை, சிறை உள்ளிட்ட போலீசின் அடக்குமுறையானது மக்கள் மனதில் ஆறாத ரணமாக நீடிக்க வேண்டும், போலீசை எந்த ஆட்சியானாலும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்ற அச்சம் மக்களிடம் நிலைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், சட்டத்துக்கும் நீதிக்கும்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்










**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 32 இதழ்: 4**

**பிப்ரவரி 2017**

தனி இதழ்: ரூ. 15.00

ஆண்டு சந்தா: ரூ.180.00

வடிவமைப்பு : மு.துரை

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:

puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

## பன்னீர் Vs எதிர் சசி:

# முன் விட்டையா, பின் விட்டையா?

இரண்டு திருடர்களில் யாரைத் தேர்ந்தெடுப்பது? சிரித்த முகமும் அடிமைக்குரிய பணிவும் காட்டும் பன்னீரையா? மன்னார்குடி மாஃபியாவின் தலைவியான சசிகலாவையா? பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு பெற்றவர்தான் முதல்வராக முடியும் என்ற அடிப்படையில் தன்னை ஆட்சியமைக்க அழைக்காமல், ஆளுநர் உள்நோக்கத்துடன் காலம் கடத்துவதாகக் குற்றம் சாட்டுகிறார் சசிகலா. தான் அவமானப்படுத்தப்பட்டு விட்டதாகவும் தன்னிடமிருந்து விலகல் கடிதம் மிரட்டி வாங்கப்பட்டதாகவும் கூறிக் கண்ணீர் வடிக்கிறார் பன்னீர்.

இந்த இரு கும்பல்களில் யாரொருவரும் தன்னை யோக்கியன் என்றோ, தங்களுக்கு ஒரு கொள்கை இருக்கிறது என்றோ வாய்தவறிக் கூடச் சொல்லிக்கொள்ள இயலாதவர்கள். சசிகலாவுக்கு சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு வர இருக்கிறது என்றால், பன்னீர்-சேகர் ரெட்டி - நத்தம் ஆகியோருக்கு எதிராகச் சில மாதங்களுக்கு முன்னர்தான் வருமான வரித்துறை சோதனை நடந்தது.

இருந்த போதிலும், சசிகலா மட்டும்தான் ஊழல் பேர்வழி என்பதைப் போலவும் சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு வருவதற்கு முன் ஆளுநர் அவரைப் பதவியேற்க அழைப்பது நெறிகெட்ட செயல் என்பதாகவும் பாரதிய ஜனதா பேசுகிறது. ஜெயலலிதாவின் கன்டெயினர் கடத்தல் முதல் தேர்தல் தில்லுமுல்லு வரை எல்லா முறைகேடுகளுக்கும் துணை நின்ற பாரதிய ஜனதா, நல்லொழுக்கத்தின் காவலனாக நடிக்கிறது. ஜெயாவின் மரணத்தில் சசிகலா மீது விழுந்துள்ள சந்தேகத்தையும், மன்னார்குடி மாஃபியா மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பையும் பன்னீருக்கு ஆதரவாகத் திருப்பும் பணியிலும், பன்னீருக்கு ஆள் பிடிக்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது.

ஜல்லிக்கட்டு போராட்டத்தில் தமிழக மக்களால் காறி உமிழ்ந்து தனிமைப்படுத்தப்பட்ட பா.ஜ.க., இப்போது நடுவர் தோரணையில் பேசுகிறது. சசிகலா மீது தமிழக மக்களுக்கு, குறிப்பாக அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியாகிய பெண்கள் கொண்டிருக்கும் வெறுப்பைப் பயன்படுத்திக் கொண்டு, இரட்டை இலைச் சின்னத்தின் வாரிசாக பன்னீர் கும்பலைக் கொண்டு வந்து, அதன் வழியாக அ.தி.மு.க.வைத் தனது கைப்பாவைக் கட்சியாக்கிக் கொள்ள முனைகிறது.

பன்னீர், சசி ஆகிய இருவரில் ஒருவரைத் தமிழக மக்கள் தேர்ந்தெடுத்தாக வேண்டும்; அல்லது தி.மு.க. கூறுவதைப் போலச் சட்டமன்றத்தைக் கலைத்து விட்டுத் தேர்தல் நடத்த வேண்டும். இவைதான் தமிழக மக்கள் முன்னால் உள்ள தெரிவுகள் என்று கூறப்படுகின்றன.

ஜல்லிக்கட்டு போராட்டத்தின் இறுதியில் போலீசின் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பன்னீரின் கண்ணீருக்கு நிவாரணம் வழங்க வேண்டுமா? கடன்பட்டுத் தற்கொலை செய்து கொள்ளும் தஞ்சை விவசாயிகளும், வறட்சியால் மடிந்து கொண்டிருக்கும் தமிழக விவசாயிகளும் சசிகலாவின் சட்டபூர்வ உரிமைக்குக் குரல் கொடுக்க வேண்டுமா? இந்தக் கழிசடைகளா மக்களின் பிரதிநிதிகள்?

இவர்கள் காட்டுகின்ற கட்டத்தில் டிக் அடிப்பதைத் தவிர நமக்குத் தெரிவு இல்லை என்றோ, இவர்கள் கூறுகின்ற சட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்ட தீர்வுகள் இல்லையென்றோ சிந்தித்திருப்போமானால், மெரினா எழுச்சியே சாத்தியமாகியிருக்காது. இந்த அரசும் பணிந்திருக்காது. இவர்களில் யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், வறட்சி, நீர்நிலைப் பராமரிப்பு, உதய் திட்டம், உணவு மானிய வெட்டு, நீட் தேர்வு, பண மதிப்பிழப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கப் போவதில்லை. ஏனென்றால், பிரச்சினைகளுக்குக் காரணமானவர்களே இவர்கள்தான். இப்பிரச்சினைகளுக்கு ஏதேனும் தீர்வு உண்டென்றால், அது இவர்களுக்கு வெளியில்தான் இருக்கிறது. இந்தக் கட்டமைப்புக்குள் சிந்திக்கும் பழக்கத்திலிருந்து நம் சிந்தனையை விடுவிப்போம். மெரினா எழுச்சியால் தலை நிமிர்ந்த தமிழகம் தலை குனிந்துவிடக் கூடாது. ●

# மிக்சர் பன்னீரா, மிஸ்டர் பன்னீரா?

**இது பன்னீருக்கு வந்த தைரியம் அல்ல நண்பர்களே, தமிழ் மக்களுக்கு வந்திருக்கும் தைரியத்தின் விளைவு.**

பன்னீருக்கு எப்படி“தைரியம்” வந்தது? பன்னீருக்கு எப்படி “சுய மரியாதை உணர்வு” வந்தது?

கொஞ்ச நாளுக்கு முன்னர்தான் “மிக்சர் பன்னீர்” என்று மெரினா கடற்கரையே அவரைக் கழுவி ஊற்றியது. அப்படிப்பட்ட பன்னீர் இன்றைக்கு தைரியமாகப் பேசுகிறார், கேள்வி கேட்கிறார் என்றால் அதற்குக் காரணம் என்ன?

ஏனென்றால், தமிழக மக்கள் கேள்வி கேட்பதை அவர் பார்த்து விட்டார். காற்று வீசும் திசையைப் பார்த்து விட்டார்.

● ❍ ●

“குறுக்கு வழியிலே ஆட்சியைப் பிடிச்ச குலேபகாவலி சசிகலா” என்று மெரினாவில் தோழர் கோவன் பாடத் தொடங்கியதும் கூட்டம் ஆர்ப்பரிக்கிறது.

போயஸ் தோட்ட வீதியிலேயே சசி கும்பலை எதிர்த்துப் பாடுகிறார் ஒரு பெண். சசிகலாவை தெருவில் போட்டுத் துவைக்கிறார்கள் தமிழ்நாட்டுப் பெண்கள்.

அந்தப் பெண்கள் ஜெ. மீது வைத்திருக்கும் பக்தி முட்டாள்தனமாக இருக்கலாம். ஜெயாவை சதி செய்து கொன்று விட்டதாக அவர்கள் கூறும் குற்றச்சாட்டு ஆதாரமற்றதாகவும் இருக்கலாம்.

ஆனால், அவர்கள் கேள்வி கேட்கிறார்கள்.

“70 நாட்களாக என்ன நடந்தது? எனக்கு பதில் சொல்” என்று கேட்கிறார்கள். அது சசிகலாவைக் கேட்கும் கேள்வி மட்டுமல்ல, சசிகலாவுக்கு துணை நின்ற ஐ.ஏ.எஸ்; ஐ.பி.எஸ்; அதிகார வர்க்கம், கவர்னர், மோடி, அப்போலோ சென்று வந்து சசிகலாவுக்கு சான்றிதழ் கொடுத்த கட்சித் தலைவர்கள் - ஆகிய அத்தனை பேரையும் பார்த்து கேட்கும் கேள்வி.

● ❍ ●

“ஜல்லிக்கட்டுக்கு அவசர சட்டம் போட்டுவிட்டோம் கலைந்து போ!” என்கிறது போலீசு. “முடியாது. சட்டத்தைக் காட்டு, படித்துப் பார்க்காமல் எப்படி போக முடியும்?” என்று கேட்கிறார்கள் மாணவர்கள்.

“போலீசையே கேள்வி கேட்கிறாயா?” என்று ரத்தம் சொட்டச் சொட்ட அடிக்கிறது போலீசு. “ஏன் அடித்தாய் எங்கள் பிள்ளைகளை?” என்று மீனவர்கள் கேள்வி கேட்கிறார்கள். மீனவர்களும் தாக்கப்படுகிறார்கள். “ஏன் அடித்தாய் மீனவர்களை?” என்று தமிழகமே கேள்வி எழுப்புகிறது.

அகிலா என்ற ஒரு பெண் எழுப்பும் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் வானதி சீனிவாசனும், போலீசு அதிகாரியும், புதிய தலைமுறை நெறியாளரும் தடுமாறுகிறார்கள்; உளறுகிறார்கள்.

ஊடகவியலாளர்கள் என்ற பெயரில் உலவும் ஆளும் வர்க்க எடுபிடிகளின் சாயம் வெளுக்கிறது. மைக்கை நீட்டிக் கேள்வி கேட்பவர்களைப் பார்த்து, மக்

**எல்லா எம்.எல்.ஏ.க்களும் மன்னார்குடி மாஃபியாவை ஆதரித்தாலும், தமிழகமே அவர்களை எதிர்க்கிறது என்பது பன்னீருக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது. இனி குனிந்தால் இலாபமா, நிமிர்ந்தால் இலாபமா என்று கூட்டிக் கழித்துப் பார்த்த அமாவாசை, நிமிர்ந்து விட்டார். இது பன்னீருக்கு வந்த தைரியம் அல்ல நண்பர்களே, தமிழ் மக்களுக்கு வந்திருக்கும் தைரியத்தின் விளைவு.**


ஜெயாவின் சமாதியில் பன்னீர்.

கள் கேள்வி எழுப்புகிறார்கள். ஊடக மாமாத்தனத்தின் மானம் கப்பலேறுகிறது.

மாணவர்களையும் இளைஞர்களையும் விசிலடிச்சான் குஞ்சுகள் என்று நினைத்துக் கொண்டு அறிவுரை சொன்ன லாரன்சு, ஹிப் ஹாப் ஆதி முதல் ரஜினிகாந்த் வரை அத்தனை சினிமாக்காரர்கள் முகத்திலும் அச்சம் படர்கிறது. ரிலீஸ் ஆனால் அசிங்கமாகி விடுவோமோ என்று ''சிங்கம்'' பம்முகிறது.

● ❍ ●

இது பன்னீருக்கு வந்த தைரியம் அல்ல நண்பர்களே, தமிழ் மக்களுக்கு வந்திருக்கும் தைரியத்தின் விளைவு. பன்னீருக்கு சுயமரியாதை உணர்வு வந்துவிட்டதாக நினைக்காதீர்கள். இது தமிழக மக்களிடம் பொங்கிய சுயமரியாதை உணர்வின் விளைவு.

எல்லா எம்.எல்.ஏ.க்களும் மன்னார்குடி மாஃபியாவை ஆதரித்தாலும், தமிழகமே அவர்களை எதிர்க்கிறது என்பது பன்னீருக்கு தெளிவாகத் தெரிந்து விட்டது. இனி குனிந்தால் லாபமா, நிமிர்ந்தால் லாபமா என்று கூட்டிக் கழித்துப் பார்த்தார். அமாவாசை - நிமிர்ந்து விட்டார்.

● ❍ ●

ஜல்லிக்கட்டு போராட்டத்தில் மிக்சர் பன்னீரைவிட அதிகமாகக் கழுவி ஊற்றப்பட்டவர் மோடி. பன்னீரோடு சேர்ந்து கரையேறி விடலாம் என்று பார்க்கிறது சங்கப் பரிவாரம். மன்னார்குடி மாஃபியாவிடமிருந்து தாங்கள்தான் தமிழகத்தைக் காப்பாற்றியது போலக் காட்டுவதன் மூலம், காவிரி உள்ளிட்ட எல்லா துரோகங்களையும் மறைக்க பாரதிய ஜனதா முயற்சி செய்யும்.

அம்மா ஆன்மாவுடன் பன்னீர் பேசிய காட்சி என்பது ஏ, பி, சி - மூன்று ஏரியாக்களிலும் நூறு நாள் ஓடும். இனிமேல்தான் இருக்கிறது படத்தின் காமெடி டிராக். சசிகலா தேர்ந்தெடுக்கப்பட்டதை அவர்களுடைய உட்கட்சி விவகாரம் என்றும், அந்தக் கட்சியின் ஜனநாயக உரிமை என்றும் வக்கணை பேசிய யோக்கியர்களெல்லாம் ''அது போன மாசம்'' என்று சமாளிப்பார்கள். ''உஸ்ஸ்... யப்பா... எப்படியெல்லாம் பேசி சமாளிக்க வேண்டியிருக்கு'' என்று தெனாய்ஞ்சு போவார்கள்.

அல்லது முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டு ''மாநில உரிமை'' என்று காமெடி பண்ணுவார்கள். உடனே, ''ஊழல் என்ன மாநில உரிமையா?'' என்று பா.ஜ.க. நாராயணனும், வானதி சீனிவாசனும் தகரத்தில் ஆணியால் கீறியது போலக் கத்துவார்கள்.

● ❍ ●

பன்னீர் பேசியிருக்கும் எதுவும், யாருக்கும் புதிய விசயமல்ல. பன்னீர் பேசி விட்டார் என்பது மட்டும்தான் புதிய விசயம்.

இரவு முழுவதும் வெள்ளை வெளேரென்ற சொகுசு கார்கள் வரிசை வரிசையாக போயஸ் தோட்டத்தை மொய்க்கின்றன. காருக்குள்ளேயிருந்து மடிப்பு கலையாத மினிஸ்டர் ஒயிட்டில் பன்றிகள் பரபரப்பாக இறங்குகின்றன. இது ''வந்தனோபசார கடைசி ஆட்டம்'', இந்த நான்கு ஆண்டுகளுடன் கதை முடிந்தது என்று எம்.எல்.ஏ.க்கள் எல்லோருக்கும் தெரியும்.

மிச்சமிருக்கும் நான்கு வருசம் சசிகலாவுடன் இருப்பதா, அதற்குப் பிந்தைய எதிர்காலத்தை யோசித்து இப்போதே தாவுவதா என்பதுதான் அவர்கள் எல்லோருடைய கவலையும்.


சசிகலாவா, ஸ்டாலினா, பாரதிய ஜனதாவா யாருக்கு ''பொக்கே'' கொடுத்துக் கும்பிடலாம். என்பது ஐ.ஏ.எஸ்; ஐ.பி.எஸ்; அதிகாரிகளுடைய கவலை.

இனி, இவர்களெல்லாம் தங்களுடைய கவலையை மக்களுடைய கவலையாக மாற்றுவார்கள். அதாவது, திருடர்கள் தங்களுடைய கவலையை, பறிகொடுத்தவர்களான நம்முடைய கவலையாக மாற்றுவார்கள்.



''ஜெயலலிதா மருத்துவமனையில் இருந்த 70 நாட்களாக என்ன நடந்தது? எனக்குப் பதில் சொல்!'' என்று சாதாரணமான பெண்கள் கேட்கும் கேள்வி, சசிகலாவை எதிர்த்துக் கேட்கும் கேள்வி மட்டுமல்ல, சசிகலாவுக்கு துணை நின்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்; அதிகார வர்க்கம், கவர்னர், மோடி, அப்போலோ சென்று வந்து சசிகலாவுக்குச் சான்றிதழ் கொடுத்த கட்சித் தலைவர்கள் – ஆகிய அத்தனை பேரையும் பார்த்து கேட்கும் கேள்வி.

தமிழக மணல் கொள்ளையன் சேகர் ரெட்டியுடன் ஓ.பி.எஸ்: பன்னீரின் கடந்தகாலமும் இருண்ட காலம்தான்!



அந்த @#$!&*x@! வேலையை ஊடகங்கள் செய்யும்.

● ❍ ●

“கவர்னர் என்ன செய்வார்? மோடி என்ன செய்வார்? ஸ்டாலின் என்ன செய்வார்” என்று விவாதங்கள் நடக்கும்.

“பன்னீர் ராஜினாமாவைத் திரும்ப பெறுவதாக சொல்லி விட்டாரே, இதை கவர்னர் ஒப்புக் கொள்வாரா?”, “சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க பன்னீருக்கு டயம் கொடுப்பாரா அல்லது சசிகலாவை ஆட்சி அமைக்க அழைப்பாரா?”, “ஜனாதிபதி ஆட்சி வருமா? தேர்தல் வருமா?”

“அரசியல் சட்டத்தின் 9999 (அ) பிரிவு என்ன சொல்கிறது, (ஒ) பிரிவு என்ன சொல்கிறது?” “இதற்கு முன் இதே போன்ற சூழ்நிலையில் அரியானாவில் கவர்னர் என்ன செய்தார், கர்நாடகாவில் என்ன செய்தார், வெங்காயத்தில் என்ன செய்தார்?”

“குதிரை பேரம் நடக்குமா? பன்னீரை ஸ்டாலின் ஆதரிப்பாரா? அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கட்சி தாவுவார்களா? எம்.எல்.ஏ.க்களைக் கடத்துவார்களா? ஒரு எம்.எல்.ஏ.வின் விலை என்ன? எந்த சாதி எம்.எல்.ஏ. எந்தப் பக்கம் போவான்?” இப்படி விவாதங்கள் நடக்கும்.

இதற்கு அன்றாடம் பத்து வல்லுநர்கள், ஆர்வலர்கள், நிலைய வித்வான்கள் பவுடர் போட்டுக் கொண்டு, நாக்கைத் தீட்டிக்கொண்டு தயாராக இருப்பார்கள். திருவிழா சீசன் கரகாட்ட செட் போல, இந்த சானலுக்கும் அந்த சானலுக்கும் பறந்து கொண்டிருப்பார்கள்.

● ❍ ●

பன்னீருடைய கவலையோ, சசிகலாவின் கவலையோ, ஸ்டாலினுடைய கவலையோ, மோடியின் கவலையோ நம் கவலை அல்ல.

அம்மா சமாதியில் உருக்கமாகப் பேசும் பரிதாப பன்னீரைப் பார்க்கும்போது, மணல் மாஃபியா சேகர் ரெட்டியுடன் பன்னீர் நிற்கும் திருப்பதி மொட்டை படத்தையும், பன்னீரின் சகோதரர்தான் தமிழக மணல் கொள்ளைக்கு மன்னார்குடி மாஃபியாவால் நியமிக்கப்பட்ட இன்சார்ஜ் என்பதையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

இன்று சசிகலாவுக்கும் அ.தி.மு.க.வின் ஜனநாயக உரிமைக்கும் பரிந்து பேசும் முன்னாள் மக்கள் நலக் கூட்டணியினர்தான், “அ.தி.மு.க.வின் வெற்றி பணம் கொடுத்து, தில்லுமுல்லு செய்து பெறப்பட்ட முறைகேடான வெற்றி” என்று பேசியவர்கள் என்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.



அரியலூர் பேருந்து நிலையம் முன்பு சசிகலாவின் உருவப் பொம்மையை எரிக்க முயன்ற தீபா பேரவையினரை உருட்டுக் கட்டைகளைக் கொண்டு தாக்கும் எம்.எல்.ஏ. தாமரை ராஜேந்திரனின் ஆதரவாளர்கள்.

**தலை முதல் கால் வரை கிரிமினல்மயமாகிவிட்ட இந்த அரசமைப்புக்குள் யாராவது ஒருவரை அதிகாரத்தில் அமர்த்திவிட்டு, பிறகு ஏமாந்துவிட்டதாகப் புலம்பியது போதும். “அதிகாரத்தை மக்கள் கையில் எடுத்துக் கொள்வதுதான் ஜனநாயகம்” என்று புரிந்து கொண்டோமானால், புதிய புதிய வாயில்கள் திறக்கும்.**

இன்று மன்னார்குடி மாஃபியாவிடமிருந்து தமிழகத்தைக் காக்க வந்த தேவதூதர்களாக தங்களைக் காட்டிக் கொள்ள முனைகின்ற பா.ஜ.க.வினர்தான், சசிகலாவையும் ஜெயாவையும் ஊழல் வழக்கிலிருந்து காப்பாற்ற அரும்பாடுபட்டவர்கள், காவிரியைத் தடுத்து தமிழக விவசாயிகளின் குடி கெடுத்தவர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

● ❍ ●

தலை முதல் கால் வரை கிரிமினல்மயமாகிவிட்ட இந்த அரசமைப்புக்குள் யாராவது ஒருவரை அதிகாரத்தில் அமர்த்திவிட்டு பிறகு ஏமாந்து விட்டதாகப் புலம்பியது போதும்.

மெரினா மாணவர்களும் இப்படி யோசித்து போராட்டத்தை ஏதாவது ஒரு கட்சியிடம் ஒப்படைத்திருந்தால், நிச்சயமாக ஏமாற்றப்பட்டிருப்பார்கள். வாடிவாசல் திறந்திருக்காது.

“உன் கட்சி, சட்டம், கோர்ட்” பற்றியெல்லாம் எங்களுக்கு கவலை இல்லை. “வாடிவாசலைத் திறக்காமல் வீடுவாசல் போவதில்லை” என்று தமிழகமே தெருவில் நின்றதன் விளைவாகத்தான் வாடிவாசல் திறந்தது. பொறுப்பை கட்சிகளிடம் ஒப்படைத்து விட்டு நாம் வீட்டுக்குப் போயிருந்தால், வாடிவாசல் திறந்திருக்காது.

“அதிகாரத்தை மக்கள் கையில் எடுத்துக் கொள்வது தான் ஜனநாயகம்” என்று புரிந்து கொண்டோமானால், புதிய புதிய வாயில்கள் திறக்கும்.

“மிக்சர்” பன்னீர்செல்வம், “மிஸ்டர்” பன்னீர்செல்வம் ஆகிவிட்டார்.

நாம் “மிக்சர் தமிழ் மக்கள்” ஆகிவிடக் கூடாது. எச்சரிக்கை !

● சூரியன்

# மக்கள் அதிகாரம் விடுத்த
# மெரினா பிரகடனம்!

**மக்கள் அதிகாரம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளரான தோழர் ராஜு 22.1.17 அன்று மெரினாவில் திரண்டு போராடிய மக்களிடையே ஆற்றிய உரை (சுருக்கப்பட்ட வடிவம்).**

**ஜல்லிக்கட்டு கோரிக்கை என்பது ஒரு குறியீடு மட்டுமே என்று வலியுறுத்தி, தமிழக மக்களின் மெரினா போராட்டத்தில் மக்கள் அதிகாரத்தின் சார்பாக 11 கோரிக்கைகளை உள்ளடக்கிய மெரினா பிரகடனம் வெளியிடப்பட்டது.**

அன்பார்ந்த தோழர்களே,

நாளை (23.1.17) சட்டமன்றம் கூட உள்ளது. ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான அவசரச் சட்டம் அங்கு இயற்றப்படும் என்று அறிவித்துள்ளார்கள். ஜல்லிக்கட்டுக்காக வழக்கு தொடுத்தவர்கள், இதை நாம் ஏற்றுக் கொண்டு போராட்டத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்று பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கூறியுள்ளார்கள்.

எதற்காக இந்தப் போராட்டம் ஆரம்பித்தது? ஜல்லிக்கட்டு நடத்தக்கூடாதென்ற உச்ச நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த போலீசார் காளைகளைக் கைப்பற்றிச் செல்வதும், அதன் உரிமையாளர்களைக் கைது செய்வதும், வழக்கு போடுவதும் தொடர்ந்தது. இனி போராடுவதைத் தவிர வேறு வழியே கிடையாது என்ற அனைவரும் திரண்டோம்.

பீட்டா என்பது விலங்குகளைக் காப்பாற்றப் போவதாகச் சொல்லிக் கொள்ளும் அமெரிக்காவின் தன்னார்வக்குழு. அவர்கள் மைய அரசின் சட்டத்தை வைத்துதான் இந்தத் தடையை வாங்கியுள்ளார்கள். இந்நிலையில், மத்திய- மாநில அரசுகள் அவசரச் சட்டம் போட்டாலும், அதற்கு உச்ச நீதிமன்றம் தடை போட முடியும். அதற்கு ஏறத்தாழ ஒரு வாரம், பத்து நாட்கள் ஆகலாம்; இடைப்பட்ட காலத்தில் ஜல்லிக்கட்டு நடத்திவிடலாம்; அதன் பிறகு மக்கள் இந்த விவகாரத்தை மறந்து விடுவார்கள்; உச்ச நீதிமன்றத்தில் தடைக்கு எதிராக மீண்டும் வழக்கு போடுவதாக சொல்லிக் கொள்ளலாம் என்று ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். இப்படியொரு பித்தலாட்டத்தைச் செய்து மறுபடியும் முதலிலிருந்து வழக்கை ஆரம்பிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளுகிறார்கள்.

பீட்டாவுக்கு ஆதரவாக ஜல்லிக்கட்டுக்கு நிரந்தரத் தடைவிதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொன்னால்கூட, நாடாளுமன்றத்தில் சட்டம் போட எந்தத் தடையும் கிடையாது. நீட் தேர்வுக்கு அப்படித்தான் போட்டார்கள். ஆனால் இப்போது பித்தலாட்டம் செய்கிறார்கள். அதனால்தான் இது ஜல்லிக்கட்டு அல்ல, டெல்லிக்கட்டு என்று நாங்கள் சொல்கிறோம். இது டெல்லிக்கும் நமக்குமான போராட்டம். ஆனால் சிலர் இது ஜல்லிக்கட்டுக்கான போராட்டம் மட்டும்தான், பீட்டாவுக்கு எதிரான போராட்டம் மட்டும்தான் என்கிறார்கள்.

ஜல்லிக்கட்டு காளையைப் பாய விட்டுவிட்டால் மட்டும் போதுமா? காளைக்கு வைக்கோலும் தீவனமும் வேண்டாமா? வைக்கோல் வேண்டுமென்றால் நெல் விளைய வேண்டாமா? நெல் விளைய வேண்டுமானால் காவிரியில் தண்ணீர் பாய வேண்டாமா? இந்தப் பிரச்சினைகளை யார் பேசுவது?

காவிரியில் நியாயப்படி தண்ணீர் கேட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு போட்டோம். ஆனால் இன்னமும் தண்ணீர் வரவில்லை. உச்ச நீதிமன்றமே உத்தரவிட்டாலும் தண்ணீர் விடமுடியாது என்று அடாவடித்தனம் செய்கிறது கர்நாடகம். காவிரி இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டு விட்டதையும், வழக்கு போட்டதையும் மாபெரும் சாதனை என்றார்கள். ஆனாலும் இன்னமும் தண்ணீர் வரவில்லை. ஆனால் சிலர் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் பேசக்கூடாது, ஜல்லிக்கட்டை மட்டும் பேசு, பீட்டாவை மட்டும் பேசு என்கிறார்கள்.

**மெரினா கடற்கரையில் மக்கள் அதிகாரம் அமைப்பினரின் உரைவீச்சுக்களை, கலைநிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் ஆதரவளித்த மக்கள் திரள்.**



பீட்டாவை எதிர்த்துதான் இத்தனை லட்சம் மக்களும் மெரினாவில் கூடி வெய்யிலிலும் பனியிலும் போராடிக் கொண்டிருக்கிறார்களா? நாம் இங்கே காவிரி பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறோம். குஜராத் படுகொலைகளைப் பற்றி பேசுகிறோம். சமஸ்கிருதத் திணிப்பைப் பற்றி பேசுகிறோம். புதிய கல்விக் கொள்கையைப் பற்றிப் பேசுகிறோம், மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கைப் பற்றிப் பேசுகிறோம். மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். காவிரியில் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இங்கே வந்திருக்கிறார்கள். இங்கே மோடியைப் பற்றிப் பேசாமல், மாநில அரசைப் பற்றிப் பேசாமல் வேறு யாரைப் பற்றிப் பேசுவது?



சென்னை-மெரினா கடற்கரையில் நடந்த ''டெல்லிக்கட்டு'' போராட்டத்தில் மக்கள் அதிகாரம் பங்கேற்று, அவ்வமைப்பின் சார்பாக உரையாற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு.

இன்றைக்கு ஜல்லிக்கட்டு பற்றி பேசுபவர்கள், நாளை மோடியின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையைப் பற்றி பேசுவார்கள்; காவிரி பிரச்சினை பற்றி பேசுவார்கள்; காளை பாய்ந்தால்தான் வீட்டுக்குத் திரும்புவேன் என்று சொல்பவர்கள், நாளை காவிரி பாய்ந்தால்தான் வீட்டுக்குத் திரும்புவேன் என்று போராடினால் என்ன செய்வது? இதுதான் அவர்களது பயம்.



மெரினா போராட்டத்தில் புரட்சிகரப் பாடல்களைப் பாடி எழுச்சியூட்டிய மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மையக் கலைக்குழு பாடகர் தோழர் கோவன்.

காவிரி டெல்டா பகுதியில் தண்ணீர் இல்லாமல் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் இறந்துள்ளனர். ஆனால் 17 பேர்தான் செத்தார்கள் என்கிறது அரசு. மாநில அரசுக்கு 2 லட்சம் கோடி கடன் இருக்கிறது. அதனால் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். ஆனால் 2014 வரை கடந்த 9 ஆண்டுகளில் மத்திய அரசானது பன்னாட்டு கார்ப்பரேட்டுகளுக்கு 36.5 லட்சம் கோடி வரித் தள்ளுபடி செய்துள்ளது.

நூறுநாள் வேலைத் திட்டத்தில், ஒரு நாளைக்கு ஏறத்தாழ 200 ரூபாய்தான் விவசாயிகளுக்குச் சம்பளமாகத் தரப்படுகிறது. ஆனால் தஞ்சை, நாகை திருவாரூர், விழுப்புரம் என பல மாவட்டங்களில் இத்திட்டத்தின்கீழ் வேலை செய்தவர்களுக்கு 6 மாத காலமாக சம்பளம் தரவில்லை. அவர்கள் சம்பளம் கொடு என்று கோரி போராட்டம் நடத்துகிறார்கள். இதைப் பற்றி நாம் பேச வேண்டாமா?

மெரினா கடற்கரையில் மக்கள் அதிகாரம் அமைப்பினரின் மேடையில் தானே முன்வந்து உரையாற்றிய போராட்டக்காரர்.



விவசாயிகளிடம் கொள்முதல் செய்த கரும்புக்கு சர்க்கரை ஆலை முதலாளிகள் ஏறத்தாழ ரூ.2000 கோடி அளவுக்கு இன்னமும் பாக்கிப் பணத்தைத் தரவில்லை. ஒரு டிராக்டர் வாங்கியதற்கு 2 தவணைக்குப் பணம் கட்டவில்லையென்றால், போலீசை வைத்து விவசாயியை அடித்து இழுத்துச் செல்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு பணத்தைக் கொடுக்காமல் பாக்கி வைத்துள்ள சர்க்கரை ஆலை அதிபர்கள் யாரையும் போலீசு கைது செய்யவில்லை.

இன்று விவசாயிகள் வஞ்சிக்கப்படுவதென்பது ஜல்லிக்கட்டுக்கு அப்பாற்பட்ட விசயமல்ல. ஒன்றொடன் ஒன்று தொடர்புடையது. நீர்நிலைகளை ஆக்கிரமிப்பதில், ஆற்றுமணலைக் கொள்ளயடிப்பதில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் பல்லாயிரம் கோடிகளைத் தின்று கொழுத்திருக்கிறார்கள். கோகோ கோலாவுக்கு தாமிரபருணி தண்ணீரைக் கொள்ளையடிக்கும் உரிமை தலைமைச் செயலகத்தில் முடிவு செய்யப்படுகிறது. மீத்தேன் திட்டமும், கூடங்குளம் அணு உலைத்திட்டமும் டெல்லியிலே முடிவு செய்யப்படுகிறது.

காவிரி நீர் மறுப்பு, மீத்தேன், அணு உலை, கெயில் குழாய் பதிப்பு, புதிய கல்விக் கொள்கை, சமஸ்கிருத திணிப்பு, நீட் தேர்வு, தமிழக மீனவர் பிரச்சினை , விவசாயிகள் சாவு, வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம், என அனைத்திலும் டெல்லி அரசு தமிழகத்தை வஞ்சித்து வருகிறது. தமிழகத்துக்கு தொடர்ந்து அநீதி இழைக்கப்படுகிறது. அதனுடைய வெளிப்பாடுதான் காளை வடிவில் பற்றிய தீ இன்று காட்டுத்தீயாக வளர்ந்து தமிழகமெங்கும் சுழன்றடிக்கிறது. வறண்ட பூமியில் போராட்ட மழை பொழிந்து கொண்டிருக்கிறது. இந்த மழை வெள்ளத்தில் கசடுகள் குப்பைகளாக அடித்துச் செல்லப்பட்டவைதான் இன்றைய அரசியல் கட்சிகள் எல்லாம்.

கட்சிகள் வெளியே தெரிகின்றன. ஆனால் அதிகாரிகள் வெளியே தெரியவில்லை. ராம் மோகன ராவ் இன்றைக்குத்தான் ஊழல் செய்தாரா? ஆற்றுமணல் கொள்ளைக்கு ரூட் போட்டுக் கொடுத்து ஸ்கெட்ச் போட்டவரே இவர்தான் என்று பத்திரிகைகளே சொல்கின்றன. துறைவாரியாக மொத்தமாக வசூல் செய்து போயசுக்கு கொடுத்தவர்கள்தான் அரசு செயலாளர்கள். இந்த அரசே சட்ட விரோதமானது. ஷீலா பால கிருஷ்ணன், ராமானுஜம் போன்ற ஓய்வு பெற்ற அதிகாரிகளால் சட்டத்துக்குப் புறம்பாக வெளி அதிகார மையத்தால் நடத்தப்பட்டு வருகிறது. நத்தம் விசுவநாதன் 30,000 கோடி கொள்ளையடித்தார், இந்தோனேஷியாவில் நிலக்கரி சுரங்கம் வைத்திருக்கிறார், சிங்கப்பூரில், துபாயில் வணிக

வளாகம் வைத்திருக்கிறார் என்று எழுதுகின்றன. மணற்கொள்ளை மூலம் நத்தம், ஓ.பி.எஸ். என்று எல்லோரும் பல ஆயிரம் கோடிகளைச் சுருட்டியிருக்கிறார்களே, இவற்றை யாரிடம் போய் முறையிட்டு நியாயம் கேட்பது?



காவிரியில் தமிழகத்திற்குரிய உரிமையை மறுத்து கர்நாடகாவில் நடந்த வன்முறையை மைய அரசும், உச்சநீதி மன்றமும் வேடிக்கை பார்க்கவே செய்தன. (கோப்புப் படம்)

டாஸ்மாக் கடைகளை சட்டத்துக்குப் புறம்பாக - கோயில்கள், பள்ளிக் கூடங்கள் அருகில், மக்களுக்கு இடையூறான இடங்களில் வைக்கக் கூடாது என்று விதிகளை வகுத்துவிட்டு, அதற்கு எதிராக நாகர்கோவில் உண்ணாமலை பகுதியில் கடையைத் திறந்து வைத்தது அரசு. அதற்கு எதிராக அந்த ஊர் பேரூராட்சியில் தீர்மானம் போட்டார்கள், வழக்கு தொடுத்தார்கள். அதை விசாரித்த உயர் நீதிமன்றம் அந்த டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி உத்தரவும் போட்டது. ஆனால் அரசு அதைச் செயல்படுத்தவில்லை. இதற்கெதிராக செல்போன் கோபுரத்தின் மீதேறிப் போராடிய முதியவர் சசிபெருமாள் என்ற போராளியைக் கொன்றுவிட்டார்கள். அந்தக் கடையை மூட வேறு என்னதான் வழி? யாரிடம் போய் சொல்வது?

அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 47-இன் படி மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும். ஆனால் இங்கே அதற்கு எதிராக அரசே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமின்றி, கலெக்டர், மண்டல அதிகாரியெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இந்த மாதம் எப்படி விற்பனையை அதிகரிப்பது, அதற்கான வழிகள் என்ன என்று தீர்மானிக்கிறார்கள். எம் தாய்மார்களின் தாலியறுக்க இந்த ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு நாம் ஏன் சம்பளம் கொடுக்க வேண்டும்?



தனியார் பள்ளிகள் ஒரு மாணவனிடம் ஆண்டுக்கு ரூ.15,000தான் வசூலிக்க வேண்டுமென்று சிங்காரவேலன் என்ற நீதிபதி தலைமையில் ஒரு கமிட்டியை அமைத்து விதிகளை வகுத்தார்கள். ஆனாலும் தனியார் பள்ளிகளில் ரூ. 50,000 முதல் 70,000 வரை வசூலிக்கப்படுகிறது. இதைப் பற்றி புகார்கள் கொடுத்து, அதிகாரிகளிடம் முறையிட்டு, உயர் நீதி மன்றத்திலும் வழக்கு போட்டு, பெற்றோர்கள் பள்ளிகளின் முன்பாக போராட்டமும் நடத்திப் பார்த்துவிட்டார்கள். ஆனால் தனியார் பள்ளி நிர்வாகத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது, யாரிடம் முறையிடுவது?

ஆற்று மணலை 3 அடிக்கு மேல் அள்ளக் கூடாது என்று விதிகள் போடுகிறார்கள். மண்வெட்டியால் மட்டுமே அள்ள வேண்டும், ஒரு லாரியில் 3 யூனிட் அளவுக்கே மணல் எடுத்துச் செல்ல வேண்டும் என விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால் கலெக்டரோ நீ 2 ஜேசிபி வைத்து மணலை அள்ளிக் கொள் என்று அவராக ஒரு உத்தரவு போடுகிறார். மணல் அள்ள உரிமம் பெற்றுள்ளவனோ, 7,8 ஜேசிபியை வைத்து 30 அடி ஆழத்துக்கு இரவு பகலாக மணலை அள்ளுகிறான். மணற்கொள்ளையைத் தடுக்க வேண்டுமென்று நேர்மையாகச் செயல்பட்ட பல கீழ்மட்ட அரசு ஊழியர்களும், கீழ்மட்ட போலீசாரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எத்தனை தாசில்தார்களும், ஆர்.டி.ஓ.க்களும் தூக்கியடிக்கப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை சமூக உணர்வுள்ள இளைஞர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்?

ஆற்றில் ஒரு லாரி மணல் வந்து சேர ஏறத்தாழ 200 ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள் சுற்றுச்சூழல் வாதிகள். கர்நாடகத்திலும் கேரளத்திலும் ஆந்திராவில் மணல் எடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இங்கே மட்டும் கேள்விமுறையின்றி மணல் அள்ளப்படுகிறது. அவையனைத்தும் மேற்கூறிய மாநிலங்களுக்கு ஆயிரக்கணக்கான லாரிகளில் கடத்திச் செல்லப்படுகிறது. அந்தக் கடத்தலில் வசூல் செய்து கொடுக்க மறுத்த நாமக்கல் மாவட்ட டி.எஸ்.பி. விஷ்ணுபிரியாவைத் தொடர்ந்து துன்புறுத்தியதால்தான், அவர் தற்கொலை செய்துகொண்டு மாண்டு போனார். இந்தப் பிரச்சினையை

மணல் அள்ள உரிமம் பெற்றுள்ளவனோ, 7,8 ஜேசிபியை வைத்து 30 அடி ஆழத்துக்கு இரவு பகலாக மணலை அள்ளுகிறான். மணற்கொள்ளையைத் தடுக்க வேண்டுமென்று நேர்மையாகச் செயல்பட்ட பல கீழ்மட்ட அரசு ஊழியர்களும், கீழ்மட்ட போலீசாரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எத்தனை தாசில்தார்களும், ஆர்.டி.ஓ.க்களும் தூக்கியடிக்கப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை சமூக உணர்வுள்ள இளைஞர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்?

யாரிடம் சொல்வது, யாரிடம் நீதி கேட்பது? நீதி கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் நேர்மையான அதிகாரியான விஷ்ணுப்பிரியா ஏன் சாக வேண்டும்? தனக்கு நீதி கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் பொதுப்பணித் துறை அதிகாரியான முத்துக்குமாரசாமி ஏன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள வேண்டும்?



நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் அருகேயுள்ள ஓ.என்.ஜி.சி.யின் துரப்பண நடவடிக்கைகளை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

தாது மணல் கொள்ளை, ஆற்றுமணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை என நூற்றுக்கணக்கான வழக்குகள் நீதிமன்றத்தில் போடப்பட்டாலும், எல்லா வழக்குகளும் ரத்து செய்யப்படுகின்றன. கொள்ளையர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்த அரசு கட்டமைப்பு முழுவதும் இப்படித்தான் உள்ளது. ஆனால் நாம் இன்னமும் மீண்டும் மீண்டும் அதன் மீது நம்பிக்கை வைக்கிறோம். அதிலே தீர்வு காண முற்படுகிறோம். ஆனால் இன்றைய கட்டமைப்பில் ஒருக்காலும் தீர்வு காணவே முடியாது. இன்றைய அரசு அதிகாரம் நம்மை ஆள்வதற்கு அருகதை இழந்துவிட்டது. தோற்றுப் போய்விட்டது. திவாலாகிப் போயிவிட்டது. இந்தக் கட்டமைப்பை அகற்றாமல், நாம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணவே முடியாது.

இப்படியொரு புரட்சி நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. யாராவது திட்டமிட்டுக் கொடுத்தார்களா? இல்லை. ஆனால் நம் காலத்தில் இந்த அதிசயம் நடந்துள்ளது. அமெரிக்காவின் வால் ஸ்டீரீட் போராட்டம்கூட இப்படி நடந்திதில்லை என்று வெளிநாட்டுப் பத்திரிகைகளே எழுதுகின்றன. வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத்தான் இதன் உண்மையான பரிமாணம் தெரிகிறது. அதுபோல, நாம் இந்தக் கட்டமைப்புக்கு வெளியே இருந்து இதைப் பார்க்கும்போதுதான் அதன் உண்மைத்தன்மை தெரியவரும்.

இன்றைக்கு கோடிக்கணக்கான மக்களை வரிவிதிப்பிற்குள் கொண்டு வருவதற்காக, வலையை அகலப்படுத்துவதைத்தான் மோடி அரசு செய்து கொண்டிருக்கிறது. இது தான் மோடியின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையின் நோக்கமே தவிர, கருப்புப் பணத்தை ஒழிப்பது, ஊழலை ஒழிப்பதோ, கள்ளப்பணத்தை ஒழிப்பதோ அல்ல. மக்களின் சேமிப்புகளைக் கொள்ளையடித்து வைத்துக்கொண்டு, தனியார் வங்கிகளுக்கும் கார்ப்பரேட்டுகளுக்கு மேலும் கடன் கொடுத்து சேவை செய்வதுதான். மோடியின் இந்தப் பித்தலாட்டத்தை எதிர்த்தால், அவர்களை தேசத்துரோகி, தீவிரவாதி என்று முத்திரை குத்துவதுதான் நடக்கிறது.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு இலவச மின்சாரம், இலவச ரோடு, தண்ணீர் வசதி, வரிச்சலுகை, வட்டித் தள்ளுபடி, கடன் தள்ளுபடி என்று எல்லா சலுகைகளையும் அள்ளிக் கொடுக்கிறார்கள். அவர்கள் சுற்றுச்சூழலை நாசமாக்கி, தண்ணீரை நாசமாக்குகிறார்கள். அங்கு தொழிற்சங்கம் கிடையாது. அடிப்படை ஊதியமும் கிடையாது. தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக வேலை செய்கிறார்கள்.

கூடங்குளம் அணு உலையை எதிர்த்துப் போராடிய இடிந்தகரை மக்கள் மீது தமிழக போலீசு நடத்திய கொலைவெறித் தாக்குதல். (கோப்புப் படம்)



நீதி கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் நேர்மையான அதிகாரியான விஷ்ணுப்பிரியா ஏன் சாக வேண்டும்? தனக்கு நீதி கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் பொதுப்பணித்துறை அதிகாரியான முத்துக்குமாரசாமி ஏன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள வேண்டும்?

ஆனால், நிலத்தையும் சுற்றுச்சூழலையும் கால் நடைகளையும் பாதுகாக்கும் நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் விவசாயிக்கு எந்தச் சலுகையுமில்லை. வங்கிகள் கடன் கொடுப்பதுமில்லை. மகாராஷ்டிராவின் விதர்பா பிராந்தியத்திலும் ஆந்திராவிலும் இரண்டரை லட்சம் விவசாயிகள் இறந்துள்ளார்கள். அந்த விவசாயிகளின் மரணம் என்பது சோறு தின்னும் அனைவருக்குமான துக்கம். இது விவசாயிக்கு மட்டுமான துக்கம் அல்ல. ‘‘உழவன் வீட்டில் இழவானால், உனக்கும் எனக்கும் எதற்குப் பொங்கல்?’’ என நாங்கள் தமிழமெங்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டோம். ஒரு விவசாயியின் சாவு என்பது ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை.

சர்க்கரையும் பால் விலையும் உயர்ந்தால் உடனே டீ விலையை

டீக்கடைக்காரர்கள் உயர்த்துகிறார்கள். தனியார் பள்ளி, கல்லூரி முதலாளிகள் ஆண்டுதோறும் கட்டணத்தை உயர்த்துகிறார்கள். ஆனால் விவசாயிகள் மட்டும் தாங்கள் விளைவித்த நெல்லுக்கும் கரும்புக்கும் விலையைத் தீர்மானிக்க முடியவில்லை. முறையாக தண்ணீரும், விவசாயிகளே தாங்கள் விளைவித்த பொருட்களுக்கு விலையைத் தீர்மானிக்கும் உரிமையும் இருந்தால், அவர்கள் எந்த மானியத்தையும் எதிர்பார்க்க மாட்டார்கள். அரசிடமிருந்து கடன் தள்ளுபடிகளை எதிர்பார்க்க மாட்டார்கள்.



கரும்புக்கான நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கக் கோரி தஞ்சாவூர் அருகே குருங்குளத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலை முன்பு விவசாயிகள் நடத்திய போராட்டம். (கோப்புப் படம்)

தண்ணீரையை தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுத்து கமிசன் பார்த்தவர்கள்தான் அரசு உயர் அதிகாரிகள். விவசாயத்தையும் விவசாயிகளையும் நட்டமாக்கி, விவசாயிகளிடமிருந்து நிலத்தைப் பறித்து அங்கு நிலக்கரி எடுக்கலாம், மீதேன் எடுக்கலாம், ஷேல் கேஸ் எடுக்கலாம் என்று திட்டம் போடுகிறார்கள். இப்படித்தான் விவசாயத்தை அழித்து விவசாயிகளை நிலத்தை விட்டே விரட்டுவதுதான் அரசின் கொள்கையாக இருக்கிறது. எல்லாவற்றையும் தனியாருக்குக் கொடுத்துவிட்டு போராடும் மக்களை ஒடுக்க போலீசை மட்டும்தான் தன் பொறுப்பில் அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிறது.

இங்கே மெரினாவில் 10 லட்சத்துக்கும் அதிகமானோர் கூடியுள்ளோம், பல்வேறு அமைப்புகள், இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் கூடியுள்ளோம். இங்கே அனைவருக்கும் குடிநீர், தேநீர், உணவு அனைத்தும் திட்டமிடப்பட்டு முறையாக வழங்கப்படுகிறது. ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டால் உடனே ஆம்புலன்சை வரவழைத்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்படுகிறது. எந்த அதிகாரியுமில்லை. எந்த போலீசும் இல்லை. யாரிடமும் யாரும் சம்பளம் வாங்கவில்லை. ஆனால் தலைமைச் செயலாளர், சட்டமன்றம், நாடாளுமன்றம், ஏகப்பட்ட அதிகாரிகள் கூட்டத்தை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் இப்படிப்பட்ட திட்டமிட்ட செயல்பாடு ஏதாவது இருக்கிறதா?

மக்கள் போராடத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு நீங்களே, இங்கே திரண்டுள்ள மக்களே சாட்சி. மீண்டும் ஒரு விடுதலைப் போராட்டத்தின் தொடக்கத்தை, எப்படி முதல் இந்தியச் சுதந்திரப் போராட்டம் தமிழத்தில் முதன்முதலாக வெடித்தெழுந்து இந்தியாவுக்கு வழிகாட்டியதோ, அதைப் போல இந்த மெரினா போராட்டத்தின் மூலம் மீண்டும் ஒரு இரண்டாம் விடுதலைப் போராட்டத்தை நாம் துவக்கியிருக்கிறோம்.

முதல் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் போது சின்ன மருதுவின் திருச்சி பிரகடனம் மிகப் பிரபலமானது. ஆங்கிலேயனை நக்கிப் பிழைத்த தொண்டைமானும், நவாபுகளும் வைத்திருக்கக் கூடிய மீசை எனது அடி மயிருக்குச் சமம் என்று அறிவித்து, சின்ன மருது திருச்சியிலே பிரகடனத்தை வெளியிட்டார்.

அந்த வழியில் தமிழக மக்களின் மெரினா போராட்டத்தில் மக்கள் அதிகாரத்தின் சார்பாக 11 பிரகடனங்களை உங்கள் முன் வாசிக்கிறேன். இதை நீங்கள் அங்கீகரித்து, இதற்காக யார் போராடினாலும் அவர்களுடன் களத்திலே நின்று போராட உறுதியேற்பீர்கள் என்று நம்புகிறோம்.

**தமிழக மக்களின் மெரினா பிரகடனம்**

- தமிழக விவசாயிகளுடைய அனைத்து வகைக் கடன்களும் ரத்து !
- காவிரி டெல்டா விவசாயிகளுக்கு மின் கட்டணம் கல்விக் கட்டணம், பேருந்துக் கட்டணம் ஆகியவை அடுத்த அறுவடை வரை ரத்து !
- ஜல்லிக்கட்டை நடத்த நிரந்தர சட்டம் !
- மூடு டாஸ்மாக்கை !
- ஆற்று மணல் தாது மணல் கிரானைட் போன்ற கனிமவளக் கொள்ளைக்குத் தடை !
- நீர்நிலைகளைப் பராமரித்து பாதுகாக்கும் பொறுப்பு கண்காணிக்கும் அதிகாரம் மக்களுக்கே !
- பணமதிப்புநீக்கத்தால் பாதிக்கப்பட்ட சிறுதொழில்களுக்கு இழப்பீடு, உடனடிக் கடன் !
- படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் வரை உதவித்தொகை !
- தமிழகத்தை அழிக்க வரும் அணு உலை, நியுட்ரினோ, மீத்தேன் ஷேல் கேஸ், கெயில் குழாய் பதிப்பு ஆகியவற்றுக்கு நிரந்தரத் தடை!
- மீனவர்களின் வாழ்வாதாரம், உயிர்பாதுகாப்புக்கு உத்தரவாதம்!
- பள்ளிக்கல்வி வரை தாய்மொழியில் அனைவருக்கும் தரமான, கட்டாய இலவசக் கல்வி !

*பெரும்பான்மை மக்களுக்கு எதிராக சதித்தனமாகக் கொண்டு வரப்படும் சட்டங்களை, உத்தரவுகளை, தீர்ப்புகளை மக்கள் ஏற்றுக் கீழ்ப்படிய முடியாது!*

நன்றி! வணக்கம்.

## மெரினா எழுச்சி :

# அடித்தாலும் அடங்காது இது வேறு தமிழ்நாடு!

**போராட்டமென்றும் கொண்டாட்டமென்றும் பலவாறாக விளக்கப்படுகின்ற மெரினா எழுச்சி என்பது தனியொரு கோரிக்கைக்கான போராட்டமல்ல. இது ஒரு உணர்வெழுச்சித் தருணம். ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகத்தின் ஒரு மனநிலை.**

இந்த மாபெரும் மக்கள் எழுச்சியை கண்ணால் பார்ப்பதற்காக வேனும் இன்னும் சில நாட்கள் ஜெயலலிதா வாழ்ந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. மெரினா எழுச்சியின் நாட்களில், ஜெயலலிதாவின் கல்லறை அங்கு இருப்பதை கடற்கரையே மறந்து விட்டது. ''அம்மா இருந்திருந்தால் கிழித்திருப்பார்'' என்று தொலைக்காட்சி விவாதத்தில் பேசுவதற்குக்கூட ஒரு அடிமையோ கைக்கூலியோ இல்லை. ''தமிழகத்தின் சுக துக்கங்கள் அனைத்தையும் நிர்ணயிப்பது தான் மட்டுமே'' என்றெண்ணி இறுமாந்திருந்த ஒரு சர்வாதிகாரி, குப்பையைப் போல தமிழ் மக்கள் தன்னை ஒதுக்கித் தள்ளியதைப் பார்க்காமலேயே போய் விட்டாரே என்று நினைக்கையில் கொஞ்சம் வருத்தமாக்தான் இருக்கிறது.

ஜெயலலிதா உயிருடன் இருந்திருந்தால் இந்தப் போராட்டமே நடந்திருக்காது என்று கருதுவோர் உண்டு. ஏனென்றால், தன்னுடைய தைரியத்திலும் அறிவாற்றலிலும் கருணையிலும்தான் தமிழகம் பிழைத்திருப்பதைப் போன்ற தோற்றத்தை ஜெயலலிதா தொடர்ந்து ஏற்படுத்தி வந்தார். உண்மை அவ்வாறில்லை. கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் நடைபெற்ற மக்கள் போராட்டங்களில் சுமார் 25% தமிழகத்தில்தான் நடந்திருக்கின்றன. சென்ற ஆண்டு நடைபெற்ற டாஸ்மாக் எதிர்ப்பு மக்கள் கிளர்ச்சி என்பது சமீபத்திய சான்று.

இருப்பினும், ஈழம், காவிரி, முல்லைப் பெரியாறு, கூடங்குளம், மூவர் தூக்கு, கெயில், மீதேன் உள்ளிட்ட பிரச்சினைகள் அனைத்திலும், மக்கள் போராட்டத்தின் மீது ஜெயலலிதா சவாரி செய்தார். அப்போராட்டங்களின் புரவலராகத் தன்னைக் காட்டிக்கொண்டே அவற்றைச் சீர்குலைத்தார். இதனை ஆமோதித்துக் கூவுவதற்கு நத்திப் பிழைக்கும் கட்சிகளும் தலைவர்களும் இருந்த காரணத்தினால் இந்தப் பொய்மை உண்மையானது.




ஜெயலலிதாவை ''மாநில உரிமைப் போராளி''யாக சித்தரிப்பதன் வாயிலாக, பார்ப்பன-இந்து தேசியத்துக்கு எதிரான திராவிட இயக்க அரசியலை அடியறுப்பதும், தமிழ் மக்களை அடிமை மனநிலையிலேயே இருத்தி வைப்பதும் ஆளும் வர்க்கத்தினரின் நோக்கமாக இருந்தது. நெடுஞ்சாண் கிடையாக காலில் விழுந்து கிடக்கும் அ.தி.மு.க. அடிமைகள், வளைந்து நெளியும் அதிகார வர்க்கம், சுயமரியாதையற்ற ஊடகங்கள், இலவசத் திட்டங்கள், வாக்குகளை விற்கப் பயிற்றுவிக்கப்பட்ட வாக்காளர்கள் என்று எல்லாத் திசைகளிலிருந்தும் தமிழ்ச் சமூகத்தின் மனதில் அடிமை மனோபாவமும் திணிக்கப்பட்டது. இவையனைத்தையும் மீறி நடந்தவைதான் தமிழக மக்களின் போராட்டங்கள்.

அ.தி.மு.க. என்ற கொள்ளைக் கூட்டத்துக்கு எதிராகவும், மோடிக்கு எதிராகவும் கிளர்ந்தெழுவதற்கான காரணங்கள் தமிழ் மக்களுக்கு ஏராளமாக இருந்தன. எனினும், இந்த எதிர்வினையின் பரிமாணம் வியக்கத்தக்கது. இது, தமிழ்ச் சமூகத்தின் உடல் முழுவதிலும் அட்ரீனலின் பொங்கிப் பாய்ந்ததைப் போன்றதொரு எழுச்சி! அடிமைத்தளையில் புழுங்கிக் கொண்டிருந்த சமூகம், தானே அறிந்திராத ஒரு கணத்தில் அதனை அறுத்தெறிந்து மேலெழும்பியது போன்றதொரு நிகழ்வு. தன்னிடம் இப்படி ஒரு உள்ளுறை ஆற்றல் இருப்பது கண்டு வியப்புற்ற சமூகம், இது நனவுதானா என்று

தன்னைத்தானே கிள்ளிப்பார்த்து உறுதி செய்து கொண்ட ஒரு தருணம்.

போராட்டமென்றும் கொண்டாட்டமென்றும் பலவாறாக விளக்கப்படுகின்ற மெரினா எழுச்சி என்பது தனியொரு போராட்டமல்ல. இது ஒரு உணர்வெழுச்சித் தருணம். ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் ஒரு மனநிலை (mood). ஒரு நீண்ட நிகழ்ச்சிப்போக்கில்தான் இந்த மனநிலையை வந்தடைந்திருக்கிறது தமிழகம். எனினும், வெடித்துக் கிளம்பாமல் குக்கர் குண்டு போல தமிழகத்தை அழுத்திக் கொண்டிருந்தது இரும்புப் பெண்மணியின் சர்வாதிகாரம். இரும்புக் குண்டு அகன்றிருக்கவில்லையெனில், மக்கள் போராட்டத்தால் அது அகற்றப்பட்டிருக்கும்.




● ○ ●

ஜல்லிக்கட்டு என்பது, காவிரி, முல்லைப்பெரியாறு, கூடங்குளம், மீதேன், கெயில், ஜி.எஸ்.டி, நீட் போன்றவற்றோடு ஒப்பிடுகையில், ஒரு 'ஆபத்தில்லாத' பண்பாட்டுக் கோரிக்கை. ஆளும் வர்க்கத்தினரே கூட அங்கீகரிக்கும் ஒரு கோரிக்கை. பீட்டா என்ற அரூபமான அந்நிய சக்தியை எதிரியாகக் காட்ட முடிவதாலும், கிறித்தவ என்.ஜி.ஓ. சதி என்று பேசுவதற்கான வாய்ப்பு இருப்பதாலும், மோடியின் காலைக் கையைப் பிடித்தாவது சாதித்துவிட இயலும் என்ற நம்பிக்கை இருந்ததனாலும் இக்கோரிக்கையைத் தமிழக பாரதிய ஜனதா தனது கையில் எடுத்துக் கொண்டது.

காவிரி போன்ற பல பிரச்சினைகளில் மோடி அரசு தமிழகத்துக்கு இழைத்த துரோகத்தை மறைப்பதற்கும், ''இந்துப் பண்பாடு'' எடுபடாத தமிழகத்தில், தன்னை தமிழ்ப் பண்பாட்டின் காவலனாகக் காட்டிக் கொள்வதற்கும் இதைவிட மலிவான வாய்ப்பு கிடைக்காது என்ற காரணத்தினால், ''தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு என்று ஒன்று நடந்தால் அதன் பெருமை மோடியை மட்டுமே சாரும்'' என்று அடித்துப் பேசிக்கொண்டிருந்தார் பொன்.ராதா கிருஷ்ணன். நடக்காமல் போனால் அதற்கும் மோடிதான் அடிவாங்க வேண்டியிருக்கும் என்று சிந்திப்பதற்கு, அதிக மூளை தேவையில்லை. என்றாலும் பொன்னார் அப்படி சிந்திக்கவில்லை. மற்ற கட்சிகளைப் பொறுத்தவரை வீரவசனம் பேசுவதற்குத் தோதான ''அடையாளக் கோரிக்கை'' என்பதால், வறட்சி, காவிரி முதலான பிரச்சினைகளைக் காட்டிலும் ஜல்லிக்கட்டு அவர்களது கைக்கு அடக்கமானதாக இருந்தது.

தமிழகமெங்கும் சுமார் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலைக்கும் அதிர்ச்சி மரணத்துக்கும் தள்ளப்பட்டு வந்த சூழலில், விவசாயத்தின் அழிவு, காவிரி உரிமை, நீர் மேலாண்மை, வறட்சி நிவாரணம் ஆகியவையே தமிழகத்தின் தலையாய பிரச்சினைகளாக இருந்தன. ''உழவன் வீட்டில் இழவு - உனக்கும் எனக்கும் எதற்குப் பொங்கல்?'' என்ற முழக்கத்துடன் பொங்கலை கருப்பு நாளாக கடைப்பிடிக்கும்படி அறைகூவல் விட்டிருந்தது ''மக்கள் அதிகாரம்''.

இத்தகைய சூழ்நிலையில் ஜல்லிக்கட்டு போராட்டம் ஒப்பீட்டளவில் கையாள்வதற்கு எளியது என்று மத்திய, மாநில அரசுகள் கணக்குப் போட்டிருக்கலாம். மெரினாவில் கூட்டம் கூடவிடாமல் தொடக்கத்திலேயே அரசும் போலீசும் தடுக்காததற்கு சசிகலா பன்னீர் அதிகாரப்போட்டி என்பது உள்ளிட்ட பல காரணங்கள் கூறப்படுகின்றன. இந்தப் போராட்டத்தை அதன் தொடக்க நாட்களில் அனுமதித்ததற்கும், பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதியதற்கும் ஆளும் வர்க்கத்திடமும் அதிகார வர்க்கத்திடமும் பல கணக்குகள் இருந்திருக்கும். பிடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையில்தான் காளையும் கூட அவிழ்த்து விடப்படுகிறது. எனினும், மெரினாவில் ''காளை'' தப்பிவிட்டது.



இதனைச் சாவி கொடுத்து இயக்கப்பட்ட போராட்டம் என்று புரிந்து கொள்வது அபத்தமானது. மக்களின் சீற்றத்துக்கான தூண்டுதல்கள்தான் போராட்டத்தின் நெம்புகோல்களாக இருந்தன.

ஜல்லிக்கட்டு நடைபெறும் கிராமங்களில் காளை வளர்ப்போரிடமும் ஜல் லிக்கட்டு வீரர்களிடமும் போலீசு கெடுபிடி செய்தது. ‘‘மாடுகளை அவிழ்க்க மாட் டோம்’’ என்று எழுதி வாங் கியது. ‘‘மோடி அவசர சட் டம் கொண்டுவர வேண் டும்’’ என்று வீர விளையாட் டுக் குழு தலைவர்களும் கட்சிகளும் வழக்கம்போல புலம்பினார்கள். ஆனால், அவசரச் சட்டத்துக்காக வழக்கம்போல மக்கள் காத்திருக்கவில்லை என்ப துதான் மாறிவிட்ட புதிய நிலைமைக்கு அறிகுறியாக இருந்தது.




மடிப்புக் கலையாத வெள்ளுடையுடன், வெயில் படாத சாமியானாக்களின் கீழ், வரிசை குலையாத நாற் காலிகளில் அமர்ந்து கட்சிக்காரர்கள் போராட்டம் நடத் திக் கொண்டிருக்க, எல்லா இடங்களிலும் தடையை மீறி மக்கள் நடத்திய ஜல்லிக்கட்டுகள் தமிழகமெங் கும் புழுதி கிளப்பின. குறிப்பிட்ட வட்டாரத்தில் மட் டுமே நடத்தப்பட்டு வந்த ஜல்லிக்கட்டு, அதன் உண் மையான பொருளில், தமிழகம் முழுவதன் கோரிக் கையாக உருவெடுத்து விட்டது. சேலத்திலும் மதுரை யிலும் ரயிலைப் பிணையக் கைதியாகப் பிடித்தார்கள் மாணவர்கள். ஜல்லிக்கட்டு டில்லிக்கட்டாக மாறத் தொடங்கிவிட்டது.

● ❍ ●

‘‘விவசாயிகள் துயரத்துக்காகப் போராடாத தமிழ்ச் சமூகம் ஜல்லிக்கட்டுக்காகப் போராடும்போது அதனை ஆதரிப்பதா?’’ என்றொரு கேள்வி இதனையொட்டி எழுப்பப்படுகிறது. ஒரு பிரச்சினையை மற்றொன்று டன் எதிர்நிலைப்படுத்தி ஒப்பீடு செய்து எடை போட் டுப் பார்க்கும் இந்தப் பார்வை, பல சந்தர்ப்பங்களில் அறிவியல் வகைப்பட்ட அணுகுமுறையாக இருப்ப தில்லை.

சாதி, மதம், மொழி, இனம், பாலினம், வர்க்கம் - எனப் பலவாறாகப் பிளவு பட்டுள்ள இந்திய சமூகத் தில், ஒன்றைப் பேசும் போது ‘‘இன்னொன்றை ஏன் பேசவில்லை’’ என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்கவியலாது. இது, இந்தச் சாதிய சமூகத்தில் நாம் எதிர்கொள்ளும் ஒரு கசப்பான எதார்த்தம். ஒன்றின் வழியாக இன் னொன்றிற்கு மக்களை எப்படி இட்டுச் செல்வது என்ற கோணத்தில்தான் இதற்கு நாம் விடை காண வேண்டும்.

இதனை வேறு ஒரு கோணத்தில் பார்ப்போம். அரசு, போலீசு, நீதிமன்றம், கட்சிகள் என்று பல்வேறு முனைகளிலும் வெவ்வேறு விதமாகத் தாக்கப்படும் மக் கள் குமுறிக் கொண்டுதானி ருக்கிறார்கள். காவிரி உள் ளிட்ட பிரச்சினைகளில் தமிழகம் வஞ்சிக்கப்படுவ தால் மோடி மீது வெறுப் பும் கொண்டிருக்கிறார்கள். பண மதிப்பழிப்பு காரண மாக ஆத்திரமடைந்திருக்கிறார்கள். இவை ஒவ்வொன் றுக்காகவும் சிலர் போராடுகிறார்கள், பலர் போராடா மல் இருக்கிறார்கள்.

இப்பிரச்சினைகள் அனைத்துக்குமான காரணத்தை ஒருங்கிணைந்த முறையில் புரிந்து கொள்ள முடிந் தவர்கள், இவை அனைத்துக்குமான அரசியல் தீர்வு குறித்து சிந்திக்கிறார்கள். பெரும்பான்மை மக்கள் அவ் வாறு அறிவுபூர்வமாக ஆய்வு செய்வதில்லை. இருப்பி னும், அவர்களுடைய மனதில் குமுறிக் கொண்டிருக் கும் கோபம், அவர்களுடைய அரசியல் உணர்வுக்குப் பொருத்தமான பிரச்சினையில், பொருத்தமான தரு ணத்தில் கருத்தாய் உருவெடுக்கிறது. போராட்டமும் பொருத்தமானதொரு வடிவத்தை எடுக்கிறது.

வாழ்க்கையிலும் இது இப்படித்தான் தொழிற்படு கிறது. ஒரு பெண் மணவிலக்கு என்ற முடிவுக்கு வரு வதற்கான குறிப்பிட்ட சம்பவத்தைத் தனியே எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால், அது அற்பமானதாகத் தோன் றக்கூடும். ஆனால் அது ‘‘அச்சை முறிக்கின்ற மயிற் பீலி’’ யாக இருக்கும். இதய நோயாளியாக அறியப் பட்ட ஒருவரது மரணம் மாரடைப்பினால்தான் நிக ழவேண்டும் என்று எதிர்பார்ப்பது அறிவுபூர்வமான தல்ல. ஒரு சாதாரணக் காய்ச்சல் கூட அந்த நோயாளி யின் மரணத்திற்கான பாதையைத் திறந்து விடலாம்.

2013-இல் வங்கதேசத்தில் இசுலாமிய அடிப்படை வாதத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த ‘‘ஷாபாக் எழுச் சி’’யை எடுத்துக் கொள்வோம். அங்கே அடிப்ப டைவாதிகளின் அட்ட காசம் தொடங்கி வெகு காலம் ஆகிவிட்டது. பல பகுத்தறிவாளர்கள் ‘‘கேட்பாரின்றி’’ கொல் லப்பட்டிருக்கிறார்கள். இருப்பினும், இந்த அநீ தியைக் ‘‘கேட்பார்’’ வரு வதற்கு ஒரு அழைப்பு



தேவைப்பட்டது. பகுத்தறி வாளர்கள் விடுத்த அழைப் புக்கு மக்கள் வரவில்லை. 1971-இல் பாக். இராணு வத்துடன் சேர்ந்து வங்க மக்களுக்கு எதிரான இனப் படுகொலையை நடத்திய ஜமாத் ஏ இசுலாமி அமைப் பின் தலைவன் அப்துல் காதர் முல்லாவுக்கு தூக்கு தண்டனை கிடைக்கும் என்று நாடே எதிர்பார்த்தது. ஆனால் அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட வுடனே, போலீஸ் வேனில் இருந்தபடி ''வெற்றி'' என்று அலட்சியமாக இரண்டு விரல்களைக் காட்டினான் அந்தக் கிழவன். அடுத்த கணமே ஷாபாக் மக்கள் எழுச்சி தொடங்கியது.



''நம் ஊரில், நம்முடைய மாட்டை வைத்து மாடு பிடி நடத்தக் கூடாது என்று உத்தரவு போடுவதற்கு மோடி யார்?'' என்ற கோபம், தமிழகத்தின் ஒரு சாதார ணக் குடிமகனுக்கு ஏற்பட்ட உணர்வு. இந்தக் கோபத் தைக் கொஞ்சம் உரசிப் பார்த்தால் அதன் அடித்தளத் தைப் புரிந்து கொள்ள முடியும்.

காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு, மீதேன், கூடங்குளம், கெயில், நியூட்ரினோ, நீட் தேர்வு, சி.பி. எஸ்.இ. திணிப்பு, இந்தி-சமஸ்கிருத திணிப்பு, மீனவர் பிரச்சினை என டில்லிக்கு எதிராக ஆத்திரம் கொள்வ தற்கான நியாயம் எல்லாத் தரப்பு மக்களிடமும் இருந் தது. பண மதிப்பழிப்பு தோற்றுவித்த பேரழிவும், பொங்கல் விடுமுறைப் பிரச்சினையும் மோடியின் மீது தாங்கொணாக் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. போதாக்குறைக்கு ''மோடி பொங்கல், மோடி ஜல்லிக் கட்டு'' என்று, வாயால் வடை சுடுபவரான மோடிக்கு, தன் வாயாலேயே குழி வெட்டி வைத்திருந்தார் பொன் னார்.

● ❍ ●

தமிழகம் எனும் கோட்டைக்குள் நுழைவதற்கு ஜல் லிக்கட்டு விவகாரத்தை ஒரு ''டிரோஜன் காளை''யா கப் பயன்படுத்த முனைந்தது பாரதிய ஜனதா. ஆனால், இந்த டிரோஜன் காளைக்குள்ளிருந்து குதித்துக் கிளம்பிய முழக்கங்கள் மோடி யையும், இந்து தேசி யத்தையும் மட்டு மின்றி, பன்னாட்டு நிறுவனங்களையும் ஓட்டுக் கட்சிகளை யும் நீதிமன்றத்தை யும் அதிகார வர்க்கத் தையும் தாக்கின.



''தமிழன்டா'' என்ற முழக்கம், டில்லிக்கு எதி ரான முழக்கமாக, தமிழ்ப் பெருமிதத்தின் வெளிப் பாடாக, இந்த அரசதி காரத்தின் மீதான இளை ஞர்களின் வெறுப்பாக... என்று ஒரே நேரத்தில் பல விதமான அர்த்தங்களைக் கொடுத்தது. எனினும், எல்லா அர்த்தங்களும் சங் கப் பரிவாரத்துக்கு மட்டும் அனர்த்தமாகவே இருந் தது. புரட்சிகர ஜனநாயக அமைப்புகளும் தமிழுணர் வாளர்களும் பகுத்தறிவா ளர்களும் விதைத்த விதை கள் மெரினாவின் மணற்பரப்பில் அங்கொன்றும் இங் கொன்றுமாக முளைக்கத் தொடங்கி, யாரும் எதிர்பார்த் திராதவொரு கணத்தில் திரும்பிய திசையெல்லாம் சில் லென்று பூத்தன.

முகநூல்கள் ''முகமற்ற'' நூல்களாயின. தன்னை முன்நிறுத்துவதற்காக முன்தள்ளப்பட்ட சமூக ஊடக வடிவங்கள், சமூக உள்ளடக்கத்தை முன்நிறுத்தின. தனக்கான நுகர்பொருளைத் தேடித் தெரிவு செய்ய அலைபாய்ந்தவர்கள், ''தமக்கான'' முழக்கங்களிலி ருந்து ''தனக்கான'' முழக்கமொன்றைத் தெரிவு செய்து கையில் ஏந்துவதற்காக அலைபாய்ந்தார்கள். தனி மனி தன் பெருந்திரளில் கரைவதும், தன்னைத் தனித்து அடையாளப்படுத்திக் கொள்வதும் முயங்கிக் கலந்த விசித்திரத் தருணமாய் விரிந்திருந்தது கடற்கரை.

எந்தப் பாடலுக்காக கோவன் தேசத்துரோக வழக் கில் கைது செய்யப்பட்டாரோ, அந்த ''ஊருக்கு ஊரு சாராயம்'' என்ற பாடலை மெரினா கடற்கரை மேடை யில் மீண்டும் மீண்டும் பாடச் சொன்னார்கள் மக்கள். தனியார்மயத்துக்கும் இந்து மதவெறிக்கும் பெப்சி- கோக்குக்கும் எதிரான பாடல்களைக் கொண்டாடினார் கள். பன்னீர், சசிகலா, சு.சாமி, மோடி போன்றோரை எள்ளி நகையாடும் பாடல்களுக்கு சன்னதம் கொண் டவர்கள் போல் ஆடினார்கள். ''ஜல்லிக்கட்டு பிரச்சி னையைத் தவிர மற்றவற்றைப் பேசக்கூடாது'' என்ற கருத்தை கேள்விக் குள்ளாக்கி, தோழர் ராஜு (மக்கள் அதி காரம்) ஆற்றிய உரை யைக் கூர்ந்து கவனித் தார்கள். எண்ணற் றோர் பேச வாய்ப்பு கேட்டு பொறுமை யாகக் காத்திருந் தார்கள். மெரினா வெங்கும் இதுவரை மேடையேறாதவர்



கள் ஏறினார்கள் என்று கூறலாம். மேடை என்பதே அகன்றது என்றும் கூறலாம்.

''யார் வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் பேச முடிந்தவரை பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சி. நாடகக் கூடங்களில், பள்ளிகளில், சோவியத் கூட்ட மண்டபங்களில், தொழிற்சங்கங்களில், ரயில்களில், டிராம்களில் எங்கும் பேச்சுப் பெருவெள்ளம், விவாதம்'' .. என்று *1917* ரசிய நவம்பர் புரட்சியின் ''உலகைக் குலுக்கிய பத்து நாட்களை'' பரவசத்துடன் விவரிப்பார் ஜான் ரீடு. ஒரு நூற்றாண்டுக்குப் பின் மெரினாவில் அது நிகழ்ந்தது.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் பிரிட்டனிலும் அது நிகழ்ந்திருக்கிறது. திருச்சபைக்கு எதிராக பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தை மார்க்ஸ் விவரிக்கிறார்.

தொழிலாளி வர்க்கத்தின் மீது கிறித்தவ நல்லொழுக்கத்தை நிலைநாட்டும் பொருட்டு *1855*-இல் பிரிட்டிஷ் அரசு கொண்டு வந்த சட்டம், ஞாயிற்றுக் கிழமைகளில் பொழுதுபோக்கு கூடங்கள், பீர் விடுதிகள் அனைத்தையும் மூடுவதாக அறிவித்தது. இதற்கெதிராக பல்லாயிரக் கணக்கான தொழிலாளிகள் நடத்திய போராட்டம், மாட்சிமை தங்கிய மகாராணியையும் திருச்சபையையும் எள்ளி நகையாடியதையும், அந்தப் பேரணியில் திரண்ட தொழிலாளர்கள் கிளப்பிய ஊளைச் சத்தம், விசில், கூச்சல்களையும் களிப்புடன் விவரிக்கிறார் மார்க்ஸ். அந்தக் கிளர்ச்சியை ''அநாகரிகமானது, அவமானகரமானது, சட்ட விரோதமானது, ஆபத்தானது'' என்றெல்லாம் சாடி எழுதிய பிரபுக்குல எழுத்தாளரையும் எள்ளி நகையாடுகிறார். மோடியின் சூப்பர்மேன் பிம்பத்தில் ஊசியைக் குத்திய மாணவர்களின் முழக்கங்கள், மோடியின் ''கடி'' டயலாக்குகளால் புண்பட்டு நொந்திருந்த மக்களுக்கு இதமாக அமைந்தன.



மாபெரும் மக்கள் எழுச்சிகள் கொண்டாட்டமாக, போராட்டமாக, கல்விக்கூடமாக... அனைத்துமாகவும்தான் பரிணமிக்கின்றன. தேச எல்லைகளும் நூற்றாண்டுகளும் கடந்து அவற்றிடையே தெரியும் ஒற்றுமை நம்மை கர்வம் கொள்ள வைக்கிறது. எதிரிகளின் எதிர்வினையும் கூட அதிசயிக்கத்தக்க விதத்தில் ஒத்ததாகவே இருக்கிறது.

பேரணியில் சென்ற தொழிலாளிகளுக்கு தேவனின் ஆசீர்வாதத்தை வழங்கும் பொருட்டு, குதிரை வண்டியில் சென்று கொண்டிருந்த ஒரு சீமாட்டி பைபிள் புத்தகங்களை விநியோகித்ததாகவும், ''அதை உன் குதிரைக்குக் கொடு'' என்று தொழிலாளிகள் கூச்சலிட்டதாகவும் எழுதுகிறார் மார்க்ஸ். மெரினாவிலும் கூட கூட்டத்தினர் மத்தியில் தேசியக் கொடியைக் கொண்டு வந்து ஆட்டினார்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். அது யாருக்கும் தேசபக்தியை உருவாக்கவில்லை. மாறாக, தேசியக் கொடிக்கு எதிரான ஆத்திரத்தையே உருவாக்கியது.

கருப்பு சட்டையை எதிர்ப்பின் குறியீடாகத்தான் போராடியவர்கள் அணிந்திருந்தனர். ஆனால் பா.ஜ.க.வுக்கு அது ''பெரியார் கலராக'' தெரிந்திருக்கிறது. கடற்கரை முழுதும் செல்பேசி ஒளியை அசைத்தது போல, குடியரசு தினத்தன்று இந்தக் கூட்டம் சட்டையைக் கழற்றி ''இருட்டை'' அசைத்தால், தெற்கே ஒரு காஷ்மீர் உருவான தோற்றம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சிய பா.ஜ.க. வினர், போலீசு வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டு, குடியரசு தினப் புறக்கணிப்பில் தமிழகம் காஷ்மீரை விஞ்சுமாறு செய்தனர்.

• ❍ •

**தா**ன் மட்டும் இல்லாவிட்டால் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து நாடே செயலற்று நின்றுவிடும் என்று கருதிக் கொண்டிருந்த போலீசையும் அரசு எந்திரத்தையும் மெரினா போராட்டம் நிலைகுலைய வைத்தது. போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது, உணவு-தண்ணீர் விநியோகம், துப்புரவுப் பணி உள்ளிட்ட அனைத்தையும் முன்வந்து செய்தார்கள் இளைஞர்கள். அவர்களில் கணிசமானோர் பெண்கள். இதுநாள்வரை ''தவிர்க்க இயலாதவர்கள்'' என்று தாங்களே நம்பிக் கொண்டிருந்த போலீசார் தேவையற்றவர்கள் என்பதை மக்கள் தம் அனுபவத்தில் உணர்ந்தார்கள். அநேகமாக மெரினாவில் மைக்கைப் பிடித்த அனைவரும் பலத்த கைதட்டல்களுக்கிடையே இந்த உண்மையை உரைத்தார்கள். இனம்புரியாத

ஒரு கர்வம் மக்களைப் பற்றிக்கொண்டு விட்டது. சமூகத்தின் மீது ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு தாங்கள் தவிர்க்கவியலாதவர்கள் என்று நிரூபிக்கும் வெறியை இது போலீசாரிடம் தோற்றுவித்திருக்க வேண்டும்.



சினிமாக் கழிசடைகளால் சிதைக்கப்பட்ட ஆண்-பெண் உறவின் மாண்பை மெரினா மீட்டது. நள்ளிரவிலும் பெண்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தனர். பேசினர், பாடினர், ஆடினர். பறை இசையின் தாள கதிக்கு ஆண்களும் பெண்களும் ஆடிக்கொண்டிருக்க, அந்தச் சூழ்நிலையால் உந்தப்பட்ட பர்தா அணிந்த ஒரு இசுலாமியப் பெண், தன் கணவனின் கையைப் பற்றியபடியே வெட்கத்துடன் மெல்ல நடனமாடிய காட்சி மறக்கவொண்ணாதது. எந்த இசைக்கருவியை தீண்டாமைக்குரிய குறியீடாக பார்ப்பனியம் ஒதுக்கி வைத்திருந்ததோ, அந்தப் பறையின் தாளத்துக்கு தமிழ்ச் சமூகமே தன்னை மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தது.

ஒரு மக்கள் திரள் எழுச்சி இயல்பிலேயே சுயநல மறுப்பைத் தனது பண்பாடாக்கிக் கொள்கிறது. ''சுயநலன் பேணுதல்தான் மனிதனின் மாற்றவொண்ணாத இயல்பு'' என்கிற முதலாளித்துவக் கருத்து, மக்கள் மனதிலிருந்து நழுவி மெரினாவில் மணற்பரப்பில் வீழ்ந்து மிதிபட்டுக் கொண்டிருந்தது. தம்மால் இயன்ற அளவு உணவோ தேநீரோ தண்ணீரோ பழங்களோ கொண்டு வந்து, சொந்தப் பிள்ளைகளுக்குக் கொடுப்பதைப் போன்ற வாஞ்சையுடன் முகம் தெரியாத அந்தக் கூட்டத்துக்கு விநியோகித்து விட்டு, நன்றி என்ற ஒரு சொல்லைக்கூட எதிர்பார்க்காமல் சென்று கொண்டிருந்தார்கள் பல எளிய மனிதர்கள்.

கையிலிருந்த உணவுப் பொட்டலங்களை உணவு கிடைக்காதவர்களின் கையில் திணித்து விட்டுச் சென்று கொண்டிருந்தார்கள் சில மாணவர்கள். ''புகல்வேன் உடைமை மக்களுக்குப் பொது, புவியை நடத்து, பொதுவில் நடத்து'' என்று ஆணையிட்ட பாரதிதாசனின் சிலைக்குக் கீழே, யாரோ குவித்திருந்த வாழைப் பழங்களையும் தண்ணீர் பாக்கெட்டுகளையும் பார்த்தபடியே பலர் கடந்து சென்றனர். தேவைப்படாதவர்கள் நெருங்கவில்லை. தேவைப்படுவோர் தேவைக்கு மேல் ஒன்றைக் கூட எடுக்கவில்லை.

''பாரடா உனது மானிடப் பரப்பை'' என்ற பாரதிதாசனின் கவிதை வரிகள் மேடையில் இசைக்கப்பட்டபோது, அடிமை மன நிலையை உதிர்த்திருந்த தமிழகம், கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒளிர்ந்த கைபேசி விளக்குகளால் ''மேதினிக்கு ஒளி'' செய்து கொண்டிருந்தது. ஜனநாயகத்துக்கான மக்கள் திரள் போராட்டம், பல பத்தாண்டு கருத்துப் பிரச்சாரம் சாதிக்க முடியாதவற்றைச் சாதிக்கும். புதிய மனிதர்களையும் புதிய விழுமியங்களையும் உருவாக்கும் என்ற உண்மையை மெரினா நிரூபித்தது. மீனவர்களும், குடிசைவாழ் மக்களும், அலங்காநல்லூரின் விவசாயிகளும் தோழமைக்கும் வீரத்துக்கும் புதிய இலக்கணத்தை தமிழ்ச் சமூகத்திற்கு அறியத் தந்தார்கள்.

நாட்டைப் பிளவுபடுத்துவதற்கான குறியீடாக மாட்டைப் பயன்படுத்தியது சங்க பரிவாரம். சமூகத்தை ஒன்றுபடுத்துவதற்கான குறியீடாக மாட்டை நிறுத்தியது தமிழ் மக்களின் ஜல்லிக்கட்டு போராட்டம். ''உன் கோமாதாவுக்கு எதிராகக் எங்களது காளை. உன் வழிபாட்டுக்கு எதிராக எங்களது விளையாட்டு. உன் ஆதிக்கத்துக்கு எதிராக எங்கள் சகோதரத்துவம்!'' - இதுதான் தமிழகம் விடுத்த செய்தி.

● ○ ●

''கலைந்து செல்லுங்கள்!'' என்று கூறியவுடனே மக்கள் கூட்டம் கலைந்து சென்றுவிடும் என்று அரசு எண்ணியது. ''முடியாது!'' என்று சொன்னவர்கள் ''தீவிரவாத, பிரிவினைவாத'' அமைப்பினராக இருந்திருந்தால் போலீசார் அதிர்ச்சியடைந்திருக்க மாட்டார்கள். ஆனால், ''சட்ட நகலைக் காட்டு; படித்துப் பார்த்துவிட்டு சொல்கிறோம்!'' என்ற பதில் காக்காய் கூட்டம் என்று அவர்கள் கருதியிருந்த மக்களிடமிருந்து வந்தது. தங்களுடைய அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும் தைரியம் மக்களுக்கு வந்துவிட்டது என்ற எதார்த்தத்தை போலீசால் சீரணிக்க முடியவில்லை.

மோடி அரசின் ஆணவம், உச்ச நீதிமன்றத்தின் அலட்சியம், மாநில அரசின் கையாலாகாத்தனம் ஆகிய அனைத்தையும் பல்வேறு பிரச்சினைகளில் மக்கள் கண்டிருக்கிறார்கள். இந்தப் பட்டறிவு தோற்றுவித்த



உள்ளுணர்வுதான் ''நம்பாதே'' என்று அவர்களை எச்ச ரித்தது. கடலை நோக்கிச் சென்ற சில ஆயிரம் மக்களை ஒரு குழுவோ, சில குழுவினரோ தலைமை தாங்கி அழைத்துச் செல்லவில்லை. இந்த அரசின் மீதான நம் பிக்கையின்மைதான் அவர்களுக்குத் தலைமை தாங்கி யது. இந்த உண்மையைக் காண விரும்பாத ஊடக அறி வாளிகள் சதிக் கோட்பாடுகளைக் கண்டுபிடித்துப் பரப் புகிறார்கள்.

ஊடக வித்தகர்கள், போலீசு அதிகாரிகள், சங்க பரி வாரத்தினர் மற்றும் ஆதி - லாரன்சு போன்ற மொக்கை கள் - இவர்களுடைய மூளைகள் வியக்கத்தக்க விதத் தில் ஒரே மாதிரியாக இயங்குகின்றன. ''தங்களது ரசி கர்களின் அறிவு தங்களுடையதைவிட மேம்பட்டதாக உயர முடியாது'' என்று ஆதியும் ஆர்.ஜே. பாலாஜியும் கருதியிருப்பார்கள். அவர்கள் அரசின் கூற்றை நம்பச் சொன்னார்கள். மாணவர்களோ நம்ப மறுத்து அவர் களை விரட்டினார்கள். ஒரே வாரத்தில் தாங்கள் செல் லாக்காசாக்கப்பட்டதற்குப் பின்னால் யாரேனும் சதி செய்திருக்க வேண்டும் என்பது அவர்கள் கற்பித்துக் கொண்ட நியாயம்.

ஊடக அறிவாளிகளின் கோணமும் ஏறத்தாழ இது தான். அன்றாடம் அரசியலில் உழலும் தாங்களே ''வயிற்றால் சிந்திப்பவர்களாக'' இருக்கையில், வெறும் ஒரு வார காலம் மட்டுமே அரசியலுக்கு அறிமுகமான நடுத்தர வர்க்கத்தினர் தம்மைவிட மேம்பட்ட முறை யில் எங்ஙனம் சிந்திக்க இயலும்? சதிகாரர்கள்தான் மூளைச்சலவை செய்து அவர்களை தைரியசாலிகளாக மாற்றியிருக்க வேண்டும் என்பது ஊடக வித்தகர்கள் கற்பித்துக் கொண்ட நியாயமாக இருந்திருக்கும்.

பா.ஜ.க.வினரைப் பொருத்தவரை, மோடியைத் தமி ழகமே கழுவி ஊற்றியது என்ற உண்மையை அவர் கள் மறைக்கவும் மறக்கவும் விரும்பினார்கள். ''தேச விரோதிகளின் சதி'' என்று கூச்சலிட்டதன் வாயிலாகத் ''தீவிரவாதிகளையும் பிரிவினைவாதிகளையும்'' ஒடுக்குவதற்கான முகாந்திரத்தை உருவாக்கியது மட்டு மல்ல, ''மோடியை கழுவி ஊற்றியது தமிழக மக்கள் அல்ல, தீவிரவாதிகள்தான்'' என்று இருட்டில் தனியே வழி நடப்பவனைப் போல தமக்குத்தாமே சத்தமாகப் பாடிக் கொண்டார்கள்.

போலீசையும் உளவுத்துறையையும் பொருத்தவரை ''தீவிரவாதிகளுக்கு மட்டுமே உரியது'' என்று அவர் கள் கருதுகின்ற அரசியல் முழக்கங்களை இலட்சோப லட்சம் தமிழ் மக்களும் தம் சொந்த முழக்கமாக எடுத் துக் கொண்டதை அவர்களால் நம்ப முடியவில்லை. ''போலீசின் அதிகாரத்தை மக்கள் நிராகரிக்கிறார்கள்'' என்ற எதார்த்தத்திற்கு அவர்களால் முகம் கொடுக்கவும் இயலவில்லை. அவர்களுக்கும் ''தீவிரவாதிகளின் சதி'' தேவைப்பட்டது.

இது தோல்வியடைந்துவிட்ட, அதே நேரத்தில் அதை ஒப்புக் கொள்ள மறுக்கின்ற ஆளும் வர்க்கத் தின் உளவியல். மெரினாவில் மக்கள் புரட்சிக்காரர்க ளாக போராட்டக் களத்துக்கு வரவில்லை. அந்த மாபெ ரும் மக்கள் திரளுக்கு யாரோ சில புரட்சிக்காரர்கள் தலைமை தாங்கி வழிநடத்தவும் இல்லை. டில்லியின் மீதான வெறுப்பும், இந்த அரசமைப்பின் மீதான அவ நம்பிக்கையும்தான் மக்களை வழிநடத்தியது. அவர்க ளில் பலருக்கு இந்த அரசமைப்பின் மீது மிச்சமிருந்த நம்பிக்கையையும் தகர்க்கும் பொறுப்பை போலீசு ஏற் றுக்கொண்டது. ''பல சந்தர்ப்பங்களில் போலீசுதான் தொழிலாளி வர்க்கத்தை அரசியல் படுத்துகிறது'' என் பார் லெனின்.

அது உண்மைதான். எனினும், அவநம்பிக்கையும் எதிர்மறை அனுபவங்களும் மட்டுமே சமூக மாற்றத் துக்கான தூண்டுதல்களாகிவிடுவதில்லை. அவற்றி லிருந்து நேர்மறையான கண்ணோட்டங்கள் தானா கவே பிறந்து விடுவதுமில்லை. சில நேரங்களில்

இவை கிளர்ச்சி மனோபாவத்தைத் தூண்டுகின்றன என்ற போதிலும், பல நேரங்களில் சோர்வடைந்து நிலவுகின்ற அரசமைப்பிடம் தஞ்சமடைகின்றன.

நிலவுகின்ற அமைப்பில் தங்களுடைய நிலை குறித்து ஒவ்வொரு பிரிவு மக்களும் ஒரு விவசாயி, மாணவன், மீனவன், ஐ.டி. ஊழியன், தொழிலாளி - வெறுப்பு கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அத்தகையதொரு வெறுப்புதான் ஜல்லிக்கட்டுக்குத் தொடர்பற்றவர்களையும் மெரினாவை நோக்கி ஈர்த்திருக்கிறது. மேலோட்டமானதொரு பார்வையில் இந்த வெறுப்பு, அரசமைப்புக்கு எதிரான வெறுப்பு போன்றதொரு தோற்றத்தைத் தரக்கூடும். அது தோற்றம் மட்டுமே.



சென்னை-மெரினாவில் நடந்த குடியரசு தின அணிவகுப்பு சீந்துவாரின்றி முடிந்தது.

மெரினாவின் உணர்வெழுச்சி என்பது தமிழ்ச் சமூகத்தின் ஒரு மனநிலை. மனநிலைகளைச் சார்ந்து ஒரு தனிமனிதனால் கூடத் தன் வாழ்க்கையின் திசையை நிர்ணயித்துக் கொள்ளவியலாது எனும்போது, சமூக மாற்றத்திற்கு “மனநிலை”யை எந்த அளவிற்கு சார்ந்திருக்க முடியும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

மெரினாவின் மக்கள் திரள் எத்தனை சமூக - அரசியல் பிரச்சினைகளைப் பேசிய போதிலும், அதற்கு ஒரு அரசியல் திசையோ, அமைப்போ இல்லை. அப்படி ஒன்று இல்லாமலிருப்பதே தமது பலம் என்று பலரும் கருதிக் கொண்டனர். இல்லாமலிருத்தல் என்பதன் பொருள் நிலவுகின்ற அமைப்பிடம் சரணடைதல் என்பதேயாகும்.

“சரணடைய முடியாது” என்ற புள்ளியில் தான் தொடங்கியது இந்தப் போராட்டம். மாநில அரசு, மத்திய அரசு, உச்ச நீதிமன்றம் என்று பந்தாடப்பட்ட ஜல்லிக்கட்டு பிரச்சனையில், தமிழக மக்களின் எழுச்சி அரசமைப்பையும் அதன் அதிகாரத்தையும் பணிய வைத்தது. எனினும், அரசமைப்பு அப்படியேதான் இருக்கிறது.

தமிழ் மக்களின் மீள் வருகைக்காக மெரினா காத்திருக்கிறது.

● மருதையன்

# ஜல்லிக்கட்டு: ஒரு மறுபரிசீலனை

“ஜல்லிக்கட்டு என்பது நிலப்பிரபுத்துவக் கலாச்சாரம், அது ஒட்டு மொத்த தமிழர்களின் அடையாளமல்ல, ஆதிக்க சாதியினரின் பண்பாட்டுச் சின்னம், பாரம்பரியம் என்பதற்காக சாதி தீண்டாமையை ஆதரிக்க முடியாது” என்று கருத்துரைக்கும் ஒரு கட்டுரையை 2008-இல் வெளியிட்டிருந்தோம்.

அலங்காநல்லூர், அவனியாபுரம் போன்ற அரசே முன்நின்று இவ்விளையாட்டினை நடத்துகின்ற இடங்களில் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஊர்ப்புறங்களில் சாதி-தீண்டாமை கடைப்பிடிக்கத்தான் படுகிறது. என்ற போதிலும் அதனை மட்டுமே முதன்மைப்படுத்தி இவ்விளையாட்டினைப் புறந்தள்ளுவது தவறென்று கருதுகிறோம். கோயில் வழிபாடு உள்ளிட்ட சமூக நடவடிக்கைகளில் நிலவும் சாதி ஆதிக்கத்தை எதிர்த்து சமத்துவத்துக்காகப் போராடுவதை ஒத்த அணுகுமுறையை ஜல்லிக்கட்டிலும் கடைப்பிடிப்பதே சரியானதெனக் கருதுகிறோம்.

விளையாட்டு போன்று தொன்று தொட்டு வருகின்ற பண்பாட்டு மரபுகளில் நிலவும் சாதி ஆதிக்கம், பாலின ஆதிக்கம் உள்ளிட்ட நிலப்பிரபுத்துவக் கூறுகளைக் களைந்து அவற்றை ஜனநாயகப் படுத்துவது எப்படி என்ற கோணத்தில் அணுகவேண்டுமேயல்லாது, அவற்றை நிலப்பிரபுத்துவக் கலாச்சாரம் என்று மொத்தமாக நிராகரிப்பது சரியல்ல என்றும் கருதுகிறோம்.

ஒரு தேசிய இனத்தின் பண்பாட்டு மரபில் தலையிட்டு தடை செய்கின்ற டில்லியின் அதிகாரம், அந்த அதிகாரத்தில் ஊடாடுகின்ற பார்ப்பன விழுமியங்கள் மற்றும் “விலங்கினப் பரிவு” என்ற ஏகாதிபத்திய மோசடி ஆகியவை இப்பிரச்சினையில் கேந்திரமானவை. “மாட்டுக்கறி தடை, ஜல்லிக்கட்டு தடை, கிடாவெட்டுத் தடை, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகத் தடை” என்பனவற்றின் அடியோட்டமாக இருப்பது பார்ப்பனியமே.

இந்தப் போராட்டத்தின் ஊடாகத்தான் ஜல்லிக்கட்டு என்பதை தமிழ் மக்கள் தம் பண்பாட்டு அடையாளமாக வரித்துக் கொண்டுள்ளனர். தாங்கள் வீர பரம்பரை என்றும் மன்னர் பரம்பரை என்றும் மீசை முறுக்குகின்ற சாதித் தலைவர்கள், தங்களது வீர விளையாட்டை அனுமதிக்குமாறு இத்தனை காலமாக அரசின் காலைப்பிடித்துக் கெஞ்சிக்கொண்டிருந்தார்கள் என்பதே உண்மை. அரசின் கழுத்தைப் பிடித்து இந்த உரிமையை நிலைநாட்டியிருப்பது சாதி-மத வேறுபாடுகளைப் புறந்தள்ளி தமிழ் மக்கள் நடத்தியிருக்கும் போராட்டம். இந்த உண்மை தமிழ்ச் சமூகத்திலிருந்து சாதிவெறியர்களை ஒழிப்பதற்கும், சாதியுணர்வை அகற்றுவதற்குமான ஆயுதமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

# விவசாயி பயிரை வளர்க்கவில்லை, பிள்ளையை வளர்க்கிறான்!

**தொழில் நொடித்து, கடனாளியாகும் ஏனைய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கொத்துக்கொத்தாகத் தற்கொலை செய்து கொள்ளாதபோது, விவசாயிகள் மட்டும் உயிரை மாய்த்துக் கொள்ளும் காரணம் இதுதான்.**

“டெல்டாவில மழை பெஞ்சும் கெடுக்கும், பெய்யாமலும் கெடுக்கும்” என்றார் வேளாண் துறையைச் சேர்ந்த ஒரு இடைநிலை அதிகாரி. கடந்த சம்பா பருவத்தின் (டிசம்பர் 2015) இறுதியில் பெய்த பெருமழையால் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 1.22 இலட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி, மகசூலுக்கு வரவேண்டிய 10 இலட்சம் டன் நெற்கதிர்கள் நாசமானதால், விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு 1,600 கோடி ரூபாய். அந்த ஆண்டில் பெய்து கெடுத்த மழை, இந்தப் பருவத்தில் பெய்யாமல் கெடுத்துவிட்டது.

டெல்டா என்றழைக்கப்படும் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் மட்டும் இந்த ஆண்டு 3.29 இலட்சம் ஹெக்டேர் பரப்பிலும், இம்மாவட்டங்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த மேட்டூர் அணை பாசனப் பகுதிகளையும் சேர்த்து 4.65 (3.29+1.36) இலட்சம் ஹெக்டேர் பரப்பிலும் சம்பா பயிரிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்பு பொய்த்துப் போயிருக்காது. ஏனென்றால், சம்பா பயிரிடும் பரப்பு குறைந்துவிடக்கூடாது என்பதற்காகவே, சம்பா தொகுப்புத் திட்டம் என்ற பெயரில் விவசாயிகளை வயலுக்குள் இறங்க வைக்கும் ஒரு கவர்ச்சித் திட்டத்தை அறிவித்தது, அ.தி.மு.க. அரசு. ஆனால், நடவு செய்யப்பட்ட மொத்தப் பரப்பில், ஒரு பத்து சதவீத பரப்பிலாவது விவசாயிகள் கண்டுமுதல் எடுத்திருப்பார்களா என்றால், நிச்சயமாக இல்லை.

திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் சாலையில் அமைந்துள்ள கீவளூருக்கு அருகேயுள்ள நாங்குடி கிராமத்தில் சம்பா சாகுபடி செய்யப்பட்ட 300 ஏக்கரில், ஒரு பத்து ஏக்கரில் அறுவடை நடந்தால் அதிசயம் என்கிறார்கள் அக்கிராம மக்கள். அந்தப் பகுதி விவசாயம் முழுவதும் வடகிழக்குப் பருவ மழையையும், வெண்ணாற்று வாய்க்காலில் வரும் நீரையும் நம்பித்தான் நடைபெறுகிறது. நிலத்தடி நீர் உப்புத் தன்மை கொண்டதாக இருப்பதால், அப்பகுதியில் பெரும்பாலும் ஆழ்குழாய் கிணறுகள் கிடையாது.

டெல்டா மாவட்டத்தில் விவசாயம் பொய்த்துப் போனதைப் பிரதிபலிக்கும் நாங்குடி கிராம வயல்கள்.



அதேநெடுஞ்சாலையில் கீவளூருக்கு முன்பாக, வடக்குத் திசையில் ஐந்தாறு கிலோமீட்டர் உள்ளே சென்றால் அமைந்திருக்கும் வடக்குவெளி கிராமத்தைச் சேர்ந்த நேரு நகர் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு ஓடம்போக்கி ஆறையும், அதிலிருந்து பிரியும் வாய்க்காலையும் ஒட்டி அமைந்திருக்கிறது. ஆறும் வாய்க்காலும் வறண்டு போய்க்கிடப்பதால், அந்தப் பகுதியில் நடவு நட்ட வயல்களில் எல்லாம் ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன.

“ஒரு மழை பெய்தால், ஒன்றரை ஏக்கர் குத்தகை நிலத்தில் வளர்ந்து நிற்கும் பயிரை ஓரளவிற்காவது காப்பாற்றி விடுவேன்” என்றார் நேரு நகரைச் சேர்ந்த வல்லரசன் என்ற இளைஞர். நான் அவரைச் சந்தித்தது ஜனவரி 15-இல்; ஜனவரி 28-இல்தான் மழை பெய்ய வாய்ப்பிருப்பதாகக் கூறினார், விவசாயத் துறை அதிகாரி. வல்லரசனின் நம்பிக்கையும், அவரது பயிரும் என்னவாயிருக்கும் எனச் சொல்லத் தேவையில்லை.

பத்து ஏக்கர் குத்தகை நிலத்தில் மூன்று இலட்ச ரூபாய் செலவு செய்து சாகுபடி செய்த நேரு நகர் வல்லரசனுக்கு, அடுத்த மழையை நம்பியிருக்கும் பயிர்கள் சாவியாகாமலிருந்தால் 50,000 ரூபாய் தேறும்; மழை இல்லையென்றால், அந்தச் சொற்பத் தொகையும் கூடக் கிடைக்காது. வயலில் போட்ட முதலீடு மொத்தமும் நட்டம்தான்.

2.5 ஹெக்டேர் குத்தகை நிலத்தில் மூன்று இலட்ச ரூபாய் செலவு செய்து நட்ட பயிர்கள் காய்ந்து போனதாகக் கூறுகிறார், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள

குழிமாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஆசைத்தம்பி. இந்த நட்டத்தை எதிர்கொள்ள முடியாமல் மனமுடைந்து பூச்சி மருந்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொண்டான் ஆசைத்தம்பியின் மகன் அரவிந்த்.



''ஒரேயொரு மழை பெய்தா போதும், இந்தப் பயிரைக் காப்பாற்றிவிடுவேன்'' என நம்பிக்கையைச் சுமந்து நிற்கும் கீவளூர்-நேரு நகரைச் சேர்ந்த வல்லரசன்.

அகால மரணமடைந்த அரவிந்தின் வயது இருபத்தைந்து. சம்சாரி வாழ்வைத் தொடங்க வேண்டிய வயதில், அவன் வாழ்வு முடிந்து போனது. தகவல் தொழில்நுட்ப அறிவியலில் பட்டயப் படிப்பு முடித்திருந்த அரவிந்த், விவசாயத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக வேறு வேலைக்குச் செல்ல விரும்பவில்லை. ஆனால், அவன் விரும்பிய தொழில் அவனை வாழவைக்கவில்லை.

இப்படி ஒவ்வொரு குறு, சிறு விவசாயியின் தலையிலும் இருபத்தைந்தாயிரம் தொடங்கி இரண்டு இலட்சம், மூன்று இலட்சமெனக் கடன் சுமை இந்த ஆண்டில் மட்டும் ஏறியிருக்கிறது. நாங்குடி கிராமத்தில் 100 ஏக்கரில் பயிர் செய்யும் ஜீவானந்தம் போன்ற பெரிய பணக்கார விவசாயிகளும் இந்த வறட்சியால் நட்டமடைந்திருக்கிறார்கள் என்றாலும், சிறு, குறு, குத்தகை விவசாயிகளின் பாடுதான் மிகவும் பரிதாபகரமானது. தற்கொலை செய்து கொண்டும், அதிர்ச்சியிலும் இறந்து போன டெல்டா மாவட்ட விவசாயிகளின் பட்டியலைப் பாருங்கள், அவர்கள் அனைவரும் சிறுவிவசாயிகளாகவே இருப்பது தற்செயலானது அல்ல என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

விவசாயிகளின் தற்கொலைக்கும் அதிர்ச்சி சாவுகளுக்கும் இந்தக் கடன் சுமை ஒரு காரணம் என்றாலும், இந்தப் பொருளாதார விவகாரத்தைத் தாண்டியும் உணர்ச்சிகரமான காரணிகளும் உள்ளன. ''விவசாயி பயிரை வளர்ப்பதில்லை, பிள்ளையை வளர்க்கிறான்'' என்று அந்த உணர்ச்சியை எடுத்துச் சொன்னார், வல்லரசன்.

இதோ, வல்லரசனின் கதையைக் கேளுங்கள். அந்த உணர்ச்சியை நாமும் புரிந்துகொள்ள முடியும். வல்லரசனுக்குத் தந்தை கிடையாது. அவரது தாய்க்கு மூன்று ஆண் பிள்ளைகள். மூத்த சகோதரர் மாற்றுத் திறனாளி, இரண்டாவது வல்லரசன், கடைசிப்பிள்ளை சந்திரபோஸ். கீவளூரில் உள்ள பெரிய அக்ஷய கோவில் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறது, அவரது குடும்பம்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட கடனை இந்த ஆண்டு விளைச்சலைக் கொண்டு ஈடுகட்டிவிட வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்த வல்லரசனுக்கு, காவிரியில் தண்ணீர் திறந்துவிடப்பட்டதும், அரசு அறிவித்த சம்பா தொகுப்புத் திட்டமும் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது. இதனையடுத்து, குத்தகைக்கு எடுத்துள்ள பத்து ஏக்கர் நிலத்திலும் பயிர் செய்வது என முடிவு செய்த வல்லரசன், துணைக்குத் தனது தம்பி சந்திரபோஸை அழைத்தார்.

இரண்டு முதுகலைப் பட்டப் படிப்பும், ஆசிரியர் பயிற்சிப் பட்டப் படிப்பும் முடித்துத் தனியார் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியாற்றிவந்த சந்திரபோஸ், அந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு, விவசாயத்திற்குத் திரும்பினார். பத்து ஏக்கரிலும் பயிர்கள் முளைத்து வந்துகொண்டிருந்த நிலையில், காவிரியில் தண்ணீர் வருவது நின்று, ஓடம்போக்கி ஆறு வறண்டு போனது. பருவ மழையும் ஏமாற்றிவிட்டது. 10 ஏக்கரில் ஒன்றரை ஏக்கரில் வளர்ந்து நின்ற பயிர்கள் மட்டும்தான் கொஞ்சம் நம்பிக்கை தருவதாக இருந்தன. அந்தப் பயிர் பிள்ளையை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என முடிவு செய்த இரண்டு சகோதரர்களும் துணிந்து ஒரு முடிவை எடுத்தனர்.

போர்வெல் தோண்ட 40,000 ரூபாய் செலவழித்தும் தண்ணீர் கிடைக்காத மனவேதனையில் தற்கொலை செய்துகொண்ட அரவிந்தின் (புகைப்படம்) தந்தை ஆசைத்தம்பி.



ஓடம்போக்கி ஆறில் ஊறும் தண்ணீரை டீசல் இன்ஜினை வைத்து இறைத்து, ஹோஸ் பைப் மூலம் எடுத்து வந்து பயிரைக் காப்பாற்றுவது என்பதுதான் அந்த முடிவு. இது எளிதான காரியமல்ல. ஓடம்போக்கி ஆற்றுக் கரையிலிருந்து ஒன்றரை கிலோமீட்டர் தூரம் தள்ளியிருக்கிறது அந்த ஒன்றரை ஏக்கர் நிலம். அத்துணை தொலைவிற்கு


ஹோஸ் பைப் தேவை. மேலும், டீசல் என்ஜின் செட், அதற்கான டீசல் எனச் செலவும் எகிறிப் போகும்.

செலவைப் பற்றி அந்தச் சகோதரர்கள் கவலை கொள்ளவில்லை. பயிரைக் காப்பாற்ற வேண்டும், அதற்குத் தண்ணீர் வேண்டும் என்பது மட்டும்தான் அவர்களது கவலையாக இருந்தது. அவர்களிடம் சொந்தமாக டீசல் என்ஜின் இருந்தது. ஓடம்போக்கி ஆற்றுக்கும் அவர்களின் வயலுக்கும் இடையே இருந்த வயல்கள் அனைத்திலும் பயிர்கள் காய்ந்து போய்விட்டதால், ஹோஸ் பைப்புகளின் வழியாகத் தண்ணீரைக் கொண்டுவருவதிலும் பிரச்சினையில்லை. ஆனால், ஆற்றில் தண்ணீர் ஊறும் போது இறைக்க வேண்டும் என்பது மட்டும்தான் அவர்களுக்குச் சவாலாக இருந்தது.

இதனால் சகோதரர்கள் இருவரும் மாறிமாறி 24 மணி நேரமும் ஆற்றின் கரையிலியே காத்துக்கிடந்தனர். தங்களால் முடியாதபோது, ஒரு கூலியாளை அமர்த்தினார்கள். ஒரு நாளல்ல, இரண்டு நாள் அல்ல, இப்படி பதினைந்து நாட்களுக்கு ஆற்றில் தண்ணீர் ஊறும்போது, அதனை எடுத்துப் பயிரைக் காப்பாற்றிக் கொண்டிருந்த வேளையில் ஓடம்போக்கி ஆறில் தண்ணீர் ஊறுவது நின்றுபோனது.

“ஒரேயொரு மழை வந்தால் போதும், இதுகள காப்பாற்றி விடுவேன்” என அந்தப் பயிரைக் காட்டி வல்லரசனும் சந்திரபோஸும் கூறியபோது, ஒரு உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆதங்கம் மட்டுமே அவர்களது முகத்தில் தெரிந்தது.

விவசாயிகளின் தற்கோலைக்கும் அதிர்ச்சி சாவுகளுக்கும் கடன் சுமை ஒரு காரணம் என்றாலும், இந்தப் பொருளாதார விவகாரத்தைத் தாண்டியும் உணர்ச்சிகரமான காரணிகளும் உள்ளன. “விவசாயி பயிரை வளர்ப்பதில்லை, பிள்ளையை வளர்க்கிறான்” என்று அந்த உணர்ச்சியை எடுத்துச் சொன்னார், வல்லரசன்.



குத்தகை பாக்கி அனைத்தையும் உடனடியாகக் கட்டச் சொல்லி கீவளூர்-நேரு நகரைச் சேர்ந்த குத்தகை விவசாயிகளுக்கு இந்து அறநிலையத் துறை அனுப்பியிருக்கும் நோட்டீஸ்.

குடித்துத் தற்கொலை செய்து கொண்டார், அரவிந்த்.

பெத்த பிள்ளையைக் காப்பாற்ற யாரும் கணக்குப் பார்ப்பதில்லை. அதுபோலத்தான் விவசாயிகளும். மற்ற தொழில் செய்பவர்கள் கடன்பட்டு நொடித்துப் போவதற்கும், ஒரு விவசாயி மேலும் மேலும் கடன்பட்டு நொடித்துப் போவதற்கும் இத்தகைய வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

இந்த நிலையிலும் வல்லரசன் உள்ளிட்டு, நேரு நகரைச் சேர்ந்த குத்தகை விவசாயிகளுக்குப் பழைய குத்தகையை உடனடியாகக் கட்டச் சொல்லி இந்து அறநிலையத் துறை நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது. குத்தகை பாக்கியையும் கடனையும் எப்படி அடைக்கப் போகிறீர்கள் எனக் கேட்டேன். “கஷ்டம்தான் சார்... கடன்காரன் வந்து வீட்டு வாசல்படியில் நின்று கத்தும்போது நாண்டுகிட்ட சாகலாம் போலத் தோணும். வேறு வேலைக்குப் போவோம், அல்லது வீட்டை விற்று, கடனை அடைத்துவிட்டு வாடகை வீட்டுக்குப் போவோம்” என அண்ணனைத் தேற்றிவருகிறேன் என்றார், சந்திரபோஸ்.

நம்பிக்கையும் எதார்த்தமும் ஒத்துப் போவது மிகவும் அரிதானது. கீவளூருக்கு அருகிலுள்ள திருவாரூரிலும் நாகப்பட்டினத்திலும் மாற்று வேலைவாய்ப்புகள் மிகவும் குறைவு. திருப்பூருக்கு வேலை தேடிப் போன நேரு நகரைச் சேர்ந்த இளைஞர்கள் சுவற்றில் அடித்த பந்து போல, வேலை கிடைக்காமல், போன வேகத்திலேயே திரும்பி வந்துவிட்டார்கள். ஆனாலும், அவர்கள் தங்களின் உழைப்பு

தற்கொலை செய்து கொண்ட அரவிந்தும் பயிர்களைக் கருகி விடாமல் காப்பாற்ற புதிதாக இரண்டு போர்வெல்லைத் தோண்டினார். அவரது தந்தை ஆசைத்தம்பி தடுத்தும் கேளாமல், புதிய போர்வெல் தோண்ட 40,000 ரூபாய் செலவழித்தார். இரண்டிலும் தண்ணீர் கிடைக்கவில்லை, பயிரையும் காப்பாற்ற முடியவில்லை. இந்த வேதனையில்தான் பூச்சிமருந்தைக்

மீது நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக எதிர்காலம் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கைதான் விவசாயிகளின் மரணங்களைக் கட்டுக்குள் வைத்திருக்கிறதேயொழிய, அரசு அறிவித்திருக்கும் நிவாரணமோ, அவர்கள் போடும் இலவச அரிசியோ அல்ல.

● குப்பன்

# வறட்சி நிவாரணம்:
# வரும், ஆனா வராது!

**தமிழக அரசு அறிவித்திருக்கும் பயிர் இழப்பீடு தொகையும், காப்பீடு தொகையும் கைக்குக் கிடைப்பதற்குள் விவசாயிகள் செத்துச் சுண்ணாம்பாகி விடுவார்கள்.**

வறட்சியால் காய்ந்து போன பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 முதல் 7,287 ரூபாய் வரை இழப்பீடு, பயிர் காப்பீடு மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 21,500 முதல் 26,000 ரூபாய் வரை காப்பீட்டுத் தொகை கிடைக்க ஏற்பாடு, நூறு நாள் வேலைத் திட்டத்தை நூற்றைம்பது நாட்களாக அதிகரித்துத் தரும் வாக்குறுதி - இவைதான் வறட்சியால் விளைச்சலை இழந்து நிற்கும் விவசாயிகளுக்குத் தமிழக அரசு அறிவித்திருக்கும் நிவாரணம்.

விளைச்சல் பொய்த்துப் போனதால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டும், அதிர்ச்சியாலும் மரணமடைந்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ள நிலையில், தற்கொலை செய்து கொண்ட 17 விவசாயிகளுக்கு மட்டும்தான் நிவாரணத் தொகை அறிவிக்கப்பட்டிருக்கிறது. மீதி மரணங்களைப் பற்றி மாவட்ட ஆட்சியரிடம் அறிக்கை வாங்கப்படும் எனக் கூறி, வாய்க்கரிசி போட்டுவிட்டார் முதல்வர் ஓ.பி.எஸ்.

விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதும், அதிர்ச்சியால் மரணமடைவதும் நவம்பர் மாத இறுதியிலேயே தொடங்கிவிட்ட போதும், அ.தி.மு.க. அரசு ஜனவரி மாதத்தின் இரண்டாவது வாரத்தில்தான் நிவாரண அறிவிப்பை வெளியிட்டது. இந்த அலட்சியத்திற்கும் தாமதத்திற்கும் காரணம், ஜெயாவின் உடல் நிலை, அவரது மரணம், அ.தி.மு.க.விற்குள் இருந்த அதிகாரப் போட்டி என்பது ஊரே

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எலிக்கறியைத் தின்று வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள அவல நிலையை உணர்த்தும்விதமாக தென்னிந்திய நதிகள் இணைப்புச் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் விவசாயிகள் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



அறிந்த உண்மை. ஊருக்கே சோறு போடுகின்ற பல இலட்சக்கணக்கான விவசாயிகளின், விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கையைவிட, ஒரு தனிநபரின் உயிர் எந்தவிதத்தில் உயர்ந்ததாக இருந்துவிட முடியும்? தனிநபர் துதி, ஊழல், கொள்ளை, வன்முறை என்பதையே கொள்கையாகவும் நடைமுறையாகவும் கொண்ட அ.தி.மு.க.வை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியதற்குத் தமிழகத்திற்குக் கிடைத்த தண்டனை என்றே இதனைக் கொள்ளலாம்.

தாமதமாக அறிவிக்கப்பட்ட நிவாரணமும் விவசாயிகளின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யவில்லை என்பதோடு, இந்த நிவாரண அறிவிப்பு மோசடியாகவும் முடியக்கூடிய வாய்ப்புகளே அதிகமுள்ளன. ஒரு ஏக்கரில் நெல் பயிரிட்டு எடுப்பதற்கு ஏறக்குறைய 25,000 ரூபாய் செலவாகும் சூழலில், இதற்குத் தமிழக அரசு கொடுக்கவிருக்கும் இழப்பீடு தொகை ரூ.5,465/- தான். மீதித் தொகையைக் காப்பீடு நிறுவனங்களின் வழியாகக் கிடைக்க ஏற்பாடு செய்வது என அறிவித்து, நழுவிக்கொண்டுவிட்டது, அ.தி.மு.க. அரசு.

தமிழக அரசு அறிவித்துள்ள இழப்பீடு தொகையை வழங்குவதற்கான கணக்கீடும்கூடப் பொங்கலுக்குப் பிறகுதான் தொடங்கவுள்ள நிலையில், அந்தச் சொற்பத் தொகைகூட விவசாயிகளுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. கடந்த ஆண்டு வெள்ளத்தால் ஏற்பட்ட இழப்புகளுக்கான காப்பீடு தொகையே இன்னும் முழுமையாக வழங்கப்படாத நிலையில், இந்த ஆண்டுக்கான காப்பீடு தொகை உடனடியாகக் கைக்கு வரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

மேலும், இதற்கு முந்தைய பயிர் காப்பீடு திட்டம் அரசு காப்பீடு நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மோடி அரசு அறிவித்திருக்கும் புதிய பயிர் காப்பீடு திட்டமோ தனியார் காப்பீடு நிறுவனங்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் ஐ.சி.ஐ.சி.ஐ. நிறுவனத்திடம்தான் பெரும்பான்மை

யான காப்பீடு தொகை செலுத்தப்பட்டிருப்பதாகக் கூறுகிறார், வேளாண் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி. இழப்புத் தொகையை வழங்குவதில் தனியார் காப்பீடு நிறுவனங்கள் காட்டும் அக்கறையும், பொறுப்புணர்ச்சியும் சந்தி சிரித்துவரும் நிலையில், விவசாயிகளுக்குப் பயிர் காப்பீடு தொகை முழுமையாகவும் விரைவாகவும் கிடைப்பது குதிரைக்கொம்புதான்.



சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து ஆய்வு செய்யும் பொதுப்பணித் துறை அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி.

மேட்டூர் பாசனப் பகுதியில் குறுவை சாகுபடிக்கான நடவு ஜூன், ஜூலையில் நடந்து முடிந்து விடும். சம்பா சாகுபடிக்கான நடவு ஆகஸ்டு இரண்டாவது வாரம் தொடங்கி அக்டோபர் தொடக்கம் வரையிலும்கூட நடைபெறும். பெரும்பாலான விவசாயிகள் கையில் காசு வைத்துக்கொண்டு நடவு வேலைகளைத் தொடங்குவதில்லை. பண மதிப்பு நீக்க நடவடிக்கையை அடுத்து, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் பணப் பரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கு மோடி அரசு தடை விதித்துவிட்ட நிலையில், கந்து வட்டிக் கும்பலும், தனியார் நிதி நிறுவனங்களும்தான் விவசாயிகளின் ‘‘ஆபத்பாந்தவனாக’’ உருவெடுத்தன. நகை தொடங்கி அண்டா குண்டா வரை அடகு வைத்து இந்த முறை வயலில் இறங்கியதாகக் கூறுகிறார்கள், வடக்குவெளி கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர்.

விளைச்சலோ பொய்த்துவிட்டது. கிராமத்தை விட்டு வெளியேறிப் போனாலும், வேறு வேலைகள் கிடைப்பதற்கும் உத்தரவாதம் இல்லை. டீ குடிக்கக் கூடக் கையில் காசில்லாத அவலம் டெல்டாவின் கிராமப்புறங்களில் உருவாகி வருகிறது. இப்படிபட்ட நிலையில் அரசின் நிவாரணத் தொகையும், காப்பீடு தொகையும் கைக்கு வருவது தாமதமாகத் தாமதமாக, கடனுக்கான வட்டியே விவசாயிகளை விழுங்கிவிடும்.

வடகிழக்குப் பருவ மழை பொய்க்காமல் பெய்து, காவிரியிலும் ஓரளவிற்காவது தண்ணீர் வரத்து இருந்தால், டெல்டா மாவட்டங்களில் ஜூன் தொடங்கி மார்ச் வரையிலும் விவசாயப் பணிகள் தொய்வில்லாமல் நடைபெறும். மே-ஜூனில் குறுவை பயிரிடுவதைத் தொடங்கும் விவசாயிகள், அதனை ஆகஸ்டு-செப்டம்பரில் அறுத்த பிறகு, தாளடி பயிரைப் பயிரிடுவார்கள். ஆகஸ்டு மற்றும் செப்டம்பரில் தொடங்கும் சம்பா பட்டம் தையில் முடிவடையும். இம்மூன்று பருவப் பயிர்களும் முடிவடைந்த பிறகு, அதே வயலில் மண்ணின் ஈரப்பதத்தைப் பயன்படுத்தி உளுந்து அல்லது பயறு வகைகள் பயிரிடப்படும். நிலத்தடி நீர் வாய்ப்புள்ள காவிரி ஆற்றுப் படுகையில் மட்டும் கோடை கால நெற்பயிர் மார்ச்சுக்குப் பின் பயிரிடப்படும்.

தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி வசுதா மிஸ்ரா தலைமையில் வந்த மையக் குழு, தஞ்சை மற்றும் பட்டுக்கோட்டை வட்டப் பகுதிகளில் நடத்திய ஆய்வு.



சம்பா நெற்பயிரும், அதனைத் தொடர்ந்து உளுந்து, பயறு வகைகளும் பயிரிடும் வாடிக்கை கொண்டது, நாகப்பட்டினம் மாவட்டம், கீவளூருக்கு அருகிலுள்ள வடக்குவெளி கிராமம். ஓடம்போக்கி ஆறும், அதன் வாய்க்காலும் ஓடும் அக்கிராமத்திலும், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் சம்பா அறுப்பு வேலைகள் ஜனவரியில் தொடங்கி நாற்பது நாட்களுக்கும் மேலாக நடைபெறும் எனக் கூறுகிறார்கள், அக்கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள். அறுப்பு சமயத்தில், காலையில் ஆறு மணிக்கு வயலில் இறங்கி மாலை ஆறு மணிக்கு வயலைவிட்டு வெளியேறும் ஒரு விவசாயக் கூலி, ஒரு மூட்டை நெல்லை ஒருநாள் கூலியாக எடுத்துவிடுவார் எனக் கணக்குச் சொல்லுகிறார்கள்.

காவிரி விவகாரத்தில் கர்நாடக காங்கிரசு அரசும், மைய பா.ஜ.க. அரசும் தமிழகத்திற்கு இழைத்த அநீதியும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்துப் போனதும் இந்த வேலைவாய்ப்புகளையும் வருமானத்தையும் சுத்தமாகத் துடைத்தெறிந்துவிட்டது. விவசாயிகளுக்காவது ஒரு கண்துடைப்பு நிவாரண உதவித் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலுள்ள ஏறக்குறைய 90 இலட்சம் விவசாயக் கூலித் தொழிலாளர்களை அம்போவென்று கைகழுவிவிட்டது, அ.தி.மு.க. அரசு.

திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 7.15 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருப்பதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. மற்ற இரு டெல்டா மாவட்டங்களையும் எடுத்துக்கொண்டால், இந்த எண்ணிக்கை நிச்சயமாக பத்து இலட்சத்தையும் தாண்டக் கூடும். இவர்களுக்கும் விவசாயம் பொய்த்துப் போய் கடனாளியாக நிற்கும் சிறு விவசாயிகளுக்கும் அடுத்த ஆறு மாதங்களுக்கு வேலை கொடுப்பதற்கு அம்மாவட்டங்களில் என்ன கட்டுமானம் இருக்கிறது?

குறுவையும், சம்பாவும் பொய்த்துப் போனதால், பொங்கலுக்கு சட்டி, பானை வியாபாரம் கூடப் பெரிதாக நடக்கவில்லை என்கிறார், பெயர் குறிப்பிட விரும்பாத தஞ்சாவூரைச் சேர்ந்த நெல் அரவை ஆலை அதிபர். பண மதிப்பு நீக்க நடவடிக்கையும் விவசாய இழப்பும் டெல்டா மாவட்டங்களில் இரட்டை இடியாக இறங்கியதால், தஞ்சாவூரிலுள்ள பெரிய வர்த்தக நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்துவரு

வதாகவும் கூறுகிறார், அவர். டெல்டா மாவட்டங்களைச் சுற்றி இயங்கி வந்த நெல் அரவை ஆலைகளில் ஏறக்குறைய 90 சதவீத ஆலைகள் ஏற்கெனவே மூடப்பட்டு, அந்த ஆலைகளில் வேலைபார்த்து வந்த வட மாநிலத் தொழிலாளர்கள் ஏஜெண்டுகள் மூலம் அவர்கள் கிராமத்திற்குத் திருப்பியனுப்பப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

பட்டப்படிப்பு முடித்துவிட்டு குத்தகைக்கு நிலத்தை எடுத்து விவசாயம் பார்த்துவரும் வடக்குவெளியைச் சேர்ந்த சரவணன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இன்று கட்டிட வேலை தேடி நாகப்பட்டினத்திற்கு சென்று வருகிறார். இந்த வேலையும் தினந்தோறும் கிடைக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்கிறார், அவர். திருப்பூருக்கு வேலைதேடிச் சென்ற இளைஞர்கள் போன கையோடு திரும்பி வந்துவிட்டதாக அக்கிராமப் பெண்கள் கூறுகிறார்கள். நூறு நாள் வேலைத் திட்டத்தைத் தமிழக அரசு எப்பொழுது தொடங்கும் என்றுதான் எல்லோரும் காத்திருக்கிறார்கள்.

பாலைவனத்தில் தெரியும் கானல் நீரைப் பார்த்து ஏமாந்து போவதைப் போல, நூறு நாள் வேலைத் திட்டம் குறித்த விவசாயத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பும் பொய்த்துப் போகுமோ என ஐயப்படுவதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன. முதலாவதாக, நூறு நாள் வேலைத் திட்டத்தையே ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு, அத்திட்டத்திற்குரிய நிதி ஆதாரங்களை மோடி அரசு வெட்டிவரும் சூழ்நிலையில், இத்திட்டத்தை நூற்றைம்பது நாட்களுக்கு நீட்டிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது, தமிழக அரசு. விலையில்லா அரிசி வழங்குவதையே நிறுத்த வேண்டும் எனத் தமிழக அரசிற்கு நெருக்கடி கொடுத்துவரும் மோடி அரசு, நூறு நாள் வேலையை நூற்றைம்பது நாட்களாக நீட்டிப்பதற்கு உடன்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

வறட்சியைக் கருத்தில்கொண்டு நூறு நாள் வேலைத்திட்டத்தின் கூலியை நானூறு ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என விவசாய சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளன. ஆனால், நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலி ரூ.203/-தான். கூலி கூட்டிக் கொடுக்கப்படுமா, இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும். இத்திட்டத்தின் கீழ் கூலி உடனடியாகக் கைக்குக் கிடைக்குமா என்பதே சந்தேகத்திற்குரியதாக மாறிவிட்டது.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கும் மற்றைய கவர்ச்சித் திட்டங்கள், அறிவிப்புகளுக்கும் முக்கிய வேறுபாடு உள்ளது. இத்திட்டம் நாடாளுமன்றத்தின் ஒப்புதலோடு, சட்டத்தின் வழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அச்சட்டம், இத்திட்டத்தின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் பதினைந்து நாட்களுக்குள் அவர்களுக்குரிய கூலியைக் கொடுக்க வேண்டும் எனக் கூறுகிறது. ஆனால், தமிழகத்தில் கடந்த செப்டம்பர் 2016 தொடங்கி இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பணிகளுக்குக் கூலி வழங்கப்படவில்லை என்றும், கிட்டத்தட்ட 2,954 கோடி ரூபாய் பெறுமான கூலி வழங்கப்படாமல் நிலுவையில் இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. (தமிழ் இந்து, ஜனவரி 11, பக்.8)

தமிழகத்தில் கடந்த செப்டம்பர் 2016 தொடங்கி நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பணிகளுக்கு 2,954 கோடி ரூபாய் பெறுமான கூலி வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. மோடி பதவியேற்ற 2014-15 ஆம் ஆண்டில் நூறு நாள் வேலைத்திட்டத்தின் மொத்தக் கூலியில் 27.43 சதவீதக் கூலிதான் பதினைந்து நாட்களில் வழங்கப்பட்டிருக்கிறது. இது 2015-16 ஆம் ஆண்டில் 31.97 சதவீதமாகச் சற்று உயர்ந்து, 2016-17 ஆம் ஆண்டில் 11.71 சதவீதமாக வீழ்ந்துவிட்டது.

மோடி அரசு பதவிக்கு வந்த பிறகு நூறு நாள் வேலைத் திட்டத்தில் பணியமர்த்தப்படும் கூலித் தொழிலாளர்களுக்குப் பதினைந்து நாட்களுக்குள் கூலி கொடுக்கமால் இழுத்தடிப்பது வாடிக்கையாகிவிட்டதாகக் குறிப்பிடுகிறது, இந்து இதழ். மோடி பதவியேற்ற 2014-15 ஆம் ஆண்டில் நூறு நாள் வேலைத்திட்டத்தின் மொத்தக் கூலியில் 27.43 சதவீதக் கூலிதான் பதினைந்து நாட்களில் வழங்கப்பட்டிருக்கிறது. இது 2015-16 ஆம் ஆண்டில் 31.97 சதவீதமாகச் சற்று உயர்ந்து, 2016-17 ஆம் ஆண்டில் 11.71 சதவீதமாக வீழ்ந்துவிட்டது.

வறட்சியால் விளைச்சலை இழந்த விவசாயிகளுக்குத் தமிழக அரசு அறிவித்திருக்கும் இழப்பீடும் உடனடியாகக் கிடைக்காது, பயிர்க் காப்பீடு திட்டத்தின் கீழ் தரப்பட வேண்டிய காப்பீடு தொகை எப்போது கிடைக்கும் என்பதும் தெரியாது, நூறு நாள் வேலைத் திட்டம் தொடங்கி, அதில் வேலை கிடைத்தாலும் கூலி உடனடியாகக் கைக்குக் கிடைப்பதற்கும் உத்தரவாதம் கிடையாது என்றால், இதற்குப் பெயர் நிவாரணமா?

அழும் குழந்தைக்குப் பஞ்சு மிட்டாய் கொடுத்து சமாதானம் செய்வதைக் கேள்விப்பட்டிருப்போம். அ.தி.மு.க. அரசோ, பஞ்சு மிட்டாய் எனக் காகிதத்தில் எழுதிக் கொடுத்து, அதனை நக்க வைத்துச் சமாதானப் படுத்த முயலுகிறது.

● ரஹீம்

# புதிய பயிர்க் காப்பீடு:

# விவசாயிகளை வஞ்சித்த மோடி!

**மோடி அரசு கொண்டுவந்திருக்கும் தேசிய வேளாண் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்குச் சுண்ணாம்பையும், தனியார் காப்பீடு நிறுவனங்களுக்கு வெண்ணெயையும் வழங்குகிறது.**

டெல்டா மாவட்டங்களில் இரு நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகளின் சாவுகளுக்கு நீதி கேட்டு, நிவாரண உதவி கேட்டு அனைத்து விவசாயிகள் சங்கங்களும் எதிர்க்கட்சிகளும் நடத்திய போராட்டங்களைத் தொடர்ந்து, அரைவேக்காட்டு அமைச்சர்களை அனுப்பி ஒப்புக்கு ஆய்வுசெய்து, போனால் போகட்டும் என்று சில நிவாரண அறிவிப்புகளையும் வெளியிடிட்டிருக்கிறார், ஓ.பி.எஸ்.

''பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 5,465 ரூபாய் வறட்சி நிவாரணமாக வழங்கப்படும். மேலும், காப்பீடு செய்தவர்களுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் 25,000 ரூபாய் பெற்றுத் தரப்படும். தற்கொலை செய்துகொண்ட 17 பேருக்கு தலா மூன்று இலட்சம் வழங்கப்படும்'' எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது. கண்முன்னே பயிர் கருகுவதைக் கண்டும், கடன் சுமையாலும் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் செத்துவிட்ட செய்தி வந்த பிறகும், வெறும் 17 பேருக்கு மட்டுமே நட்டஈடு வழங்கியிருப்பது அயோக்கியத்தனம் என்றால், நிவாரணத் தொகையும் அற்பத்தனமாகவே உள்ளது.

''ஒரு ஏக்கருக்கு ரூ.20,000 வரை விவசாயிகள் முதலீடு செய்திருக்கும்போது 5,465 ரூபாய் என்பது மிகவும் குறைவு. வறட்சி நிவாரணமாக ஹெக்டேருக்கு 13,500 ரூபாய்க்கு மேல் கொடுக்கக் கூடாது என மத்திய அரசு உச்சவரம்பு நிர்ணயித்துள்ளது. இதனடிப்படையில்தான் மாநில அரசு இந்த இழப்பீடை முடிவு செய்துள்ளது. தனது விவசாயிகள் மீது தமிழக அரசுக்கு அக்கறை இல்லாததையே இது காட்டுகிறது'' என்று ஒட்டுமொத்த விவசாயிகளின் குரலை எதிரொலிக்கிறார், அனைத்து விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் பொருளாளர் நாகை எஸ்.சிறீதர்.



''இந்த ரூபாயும் மொத்தமா கிடைக்காது. ரூ.4000 தான் எங்கள் கைக்கு வரும். மீதியெல்லாம் லஞ்சமாப் போயிரும். அந்த நாலாயிரமும் எப்போ வரும்னு தெரியலையே'' என்று புலம்புகிறார்கள் விவசாயிகள். அறிவிக்கப்பட்ட வறட்சி நிவாரணத்தின் இலட்சணம் இதுவென்றால், அரசு வாங்கித் தருவதாகக் கூறும் காப்பீட்டுத் தொகையின் கதையோ பெரும் மோசடியாக இருக்கிறது.

1999 முதல் 2014 வரை நடைமுறையில் இருந்துவந்த பழைய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்படி, அரசு காப்பீடு நிறுவனங்கள் நேரடியாக இழப்பீடு வழங்கி வந்தன. ஆனால், மோடி அரசு அந்நிய மற்றும் தனியார் காப்பீட்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட புதிய ''தேசிய வேளாண் காப்பீட்டு''த் திட்டத்தை கடந்த 2015 முதல் நாடு முழுவதும் அமல்படுத்தி வருகிறது. மூன்று பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் மட்டுமே இருந்த இடத்தில், தற்போது 16 தனியார் காப்பீட்டு நிறுவனங்களை அனுமதித்துள்ளது மோடி அரசு. இதற்கு வசதியாக பழைய விதிமுறைகளை நீக்கப்பட்டு, தனியார் காப்பீட்டு நிறுவனங்களுக்குச் சாதகமான புதிய விதிமுறைகள் புகுத்தப்பட்டுள்ளன.

சிறுவிவசாயிகளுக்கு 2.5%, பிற விவசாயிகளுக்கு 1.5% என்றிருந்த பிரிமியத் தொகை, தற்போது 16% என உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி, 25,000 ரூபாய்

**பழைய காப்பீட்டுத் திட்டப்படி, 100% இழப்புக்கு 5%-ஐக் கழித்து 95% இழப்பீடு பெறமுடியும். ஆனால், புதிய திட்டப்படி 100 இழப்புக்கு நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு 70%, பிற மாவட்டங்களுக்கு 60% மட்டுமே இழப்பீடு பெறமுடியும்.**

காப்பீடு செய்ய 4,000 ரூபாய் பிரிமியமாகச் செலுத்த வேண்டும். இதற்கு எதிராக விவசாய சங்கங்கள் தொடர் போராட்டங்களை நடத்திய பின், 2% பிரிமியத்தை மட்டும் விவசாயிகள் செலுத்துவது என்றும், மீதியை மத்திய-மாநில அரசுகள் மானியமாக வழங்கும் என்றும் மத்திய அரசு அறிவித்தது. இதன்படி, தற்போது விவசாயிகள் 800 ரூபாயும், மத்திய, மாநில அரசுகள் ரூ.3,200-ஐயும் செலுத்தி வருகின்றன. உர மானியம் ரத்தானது போல, இந்த மானியமும் நாளை பறிக்கப்படலாம்!



பயிர்க் காப்பீடு செய்த வயலை ஸ்மார்ட் போன், ஜி.பி.எஸ். கருவி ஆகியவற்றைக் கொண்டு ஆய்வு செய்யும் அதிகாரிகள். (கோப்புப் படம்)

பழைய காப்பீட்டுத் திட்டப்படி, 100% இழப்புக்கு 5%-ஐக் கழித்து 95% இழப்பீடு பெறமுடியும். விவசாயிகள் காப்பீடு செய்துள்ள தொகைக்கு மேல் இழப்பானாலும், அதை மத்திய, மாநில அரசுகளே ஏற்றுக்கொள்ளும் விதிமுறைகள் இருந்தன. ஆனால், புதிய திட்டப்படி 100 இழப்பீட்டிற்கு நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு 70%, பிற மாவட்டங்களுக்கு 60% மட்டுமே இழப்பீடு பெறமுடியும். மேலும் 150%க்குமேல் இழப்பு ஏற்பட்டால், (அதாவது ஒரு ஏக்கருக்கு 25,000 ரூபாய் என விவசாயிகள் காப்பீடு செய்திருக்கும் போது, இழப்பு 37,500 ரூபாய்க்கு மேல் இருந்தால்) முழு இழப்பீட்டையும் மத்திய-மாநில அரசுகளே ஏற்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பேரில்தான் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் பயிர் காப்பீட்டு திட்டத்தில் இறங்கியுள்ளன.

இதன்படி, “ தற்போது 25,000 ரூபாய்க்கு காப்பீடு செய்துள்ள நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகள் ரூ.17,500-ம், பிற மாவட்ட விவசாயிகள் ரூ.16,000-ம் தான் இழப்பீடாக பெறமுடியும். அரசு கூறுவது போல 25,000 ரூபாய் பெறுவதற்கு புதிய திட்டத்தில் இடமில்லை. தமிழக அரசு நாடகமாடுகிறது” என்று சாடுகிறார் திருவாரூர் மாவட்ட விவசாய சங்கத் தலைவர் திரு.காவிரி தனவேல்.

இழப்பீட்டைக் கணக்கிடுவதிலும் புதிய திட்டம் விவசாயிகள் நலனுக்கு எதிராகவே உள்ளது. பழைய திட்டத்தில், 5 வருட சராசரி மகசூலில் குறைந்த மகசூல் உள்ள 2 வருடத்தை நீக்கி விட்டு, மீதமுள்ள 3 வருட மகசூலில் இருந்து உத்தேச மகசூல் தீர்மானிக்கப்படும். ஆனால், புதிய திட்டத்தில், 7 வருட சராசரியில், அதிக மகசூல் உள்ள 2 வருடத்தைக் கழித்து மீதியுள்ள 5 வருட சராசரியிலிருந்து உத்தேச மகசூல் கணக்கிடப்படுகிறது. எனவே, பழைய திட்டத்தைவிட புதிய திட்டத்தில் இழப்பீடு குறைவாகவே இருக்கும்.



பழைய காப்பீடு திட்டத்தில், 5 வருட சராசரி மகசூலில் குறைந்த மகசூல் உள்ள 2 வருடத்தை நீக்கி விட்டு, மீதமுள்ள 3 வருட மகசூலில் இருந்து உத்தேச மகசூல் தீர்மானிக்கப்படும். ஆனால், புதிய திட்டத்தில், 7 வருட சராசரியில், அதிக மகசூல் உள்ள 2 வருடத்தைக் கழித்து மீதியுள்ள 5 வருட சராசரியிலிருந்து உத்தேச மகசூல் கணக்கிடப்படுகிறது.

இவ்வாறு எல்லாவகையிலும் விவசாயிகளை விட, ஐ.சி.ஐ.சி.ஐ., லாம்போர்டு, ஹெச்.டி.எஃப்.சி., இஃப்கோ-டோக்கியோ போன்ற 16 தனியார் பயிர் காப்பீட்டு நிறுவனங்களின் இலாபத்தை மட்டுமே கொள்கையாகக் கொண்டதுதான் மோடியின் தேசிய வேளாண் காப்பீட்டுக் கொள்கை.

கடந்த வருடம் தமிழக அரசு செலுத்த வேண்டிய பிரிமியத் தொகை ரூ.19 கோடி, மற்றும் பங்குத் தொகையான ரூ.198 கோடியையும் இன்றுவரை செலுத்தவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் 2015-ஆம் ஆண்டிற்கான இழப்பீடே கிடைக்காமல் விவசாயிகள் தவிக்கும் நிலையில், நடப்பு வறட்சி நிவாரணமும், காப்பீட்டுத் தொகையும் எப்போது கிடைக்கும் என்ற ஏக்கத்துடன் விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

பணமதிப்பு இழப்பு நடவடிக்கையால் நிறுத்தி வைக்கப்பட்ட டோல்கேட் கட்டண வசூலை, ஒரே வாரத்தில் அந்த நிறுவனங்களுக்கு இழப்பீடாக வழங்கிய மோடி, தமிழக வறட்சிக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யாமல் இழுத்தடித்து வருகிறார்.

பழைய காப்பீடு திட்டப்படி, அடுத்த பருவம் தொடங்குவதற்கு முன் இழப்பீடு தரவேண்டும். புதிய திட்டப்படி, இழப்பு ஏற்பட்ட 30 நாட்களில் இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்று அரசு விதி இருக்கிறது. தான் இயற்றிய விதிமுறைகளுக்கு தானே கட்டுப்படாத தான்தோன்றி அரசு, தனது குடிமக்களை காப்பாற்றும் என நம்புவது ஏமாளித்தனமல்லவா!

● கதிர்

# நுண்கடன் நிறுவனங்கள் - மகளிர் சுய உதவிக் குழுக்கள்:
# தனியார்மயம் உருவாக்கிப் பரப்பும் விஷக்கிருமிகள்!

**பண்ணையார்களுக்கும் கங்காணிகளுக்கும் பயந்து நடுங்கிய மக்கள், இப்பொழுது நுண்கடன் நிறுவனங்களின் வட்டிப் பணம் வசூலிக்கும் துரைமார்களைக் கண்டுதான் அச்சப்படுகிறார்கள்.**

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்குவெளி கிராமம். சுமார் 200 தலித் குடும்பங்கள் மட்டும் வாழும் இக்கிராமத்தினர் அனைவரும், இங்குள்ள கோயில் நிலங்களை நீண்டகாலமாகக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த 2015-டிசம்பரில் பெய்த பெருமழையில் பகுதியளவு மகசூலைப் பறிகொடுத்த இப்பகுதி விவசாயிகள், நடப்பு வறட்சியில் முழு விவசாயத்தையும் பறிகொடுத்துவிட்டுப் பரிதாபமாக நிற்கிறார்கள்.

''ஒவ்வொரு வருசமும் புதுநெல் அரிசியில்தான் பொங்கல் வைப்போம். அடுத்தநாள் கறிசோறு ஆக்குவோம். இந்த வருஷம் புது அரிசியும் இல்ல. பொங்கலும் இல்ல. கறியும் இல்ல. சாம்பார் சோத்துக்கே வழியில்லைங்க'' என்று கண் கலங்குகிறார் 63 வயதான மணி என்ற விவசாயி.

''போன அறுவடையில் கிடைத்த நெல்லை வைத்து இந்த மாதத்தை வேண்டுமானால் சமாளிப்பாங்க. அதற்குப் பிறகு ரேசன் அரிசியிலதான் உயிர்வாழ முடியும். வேற வழியில்ல'' என்கிறார் பக்கத்து கிராமத்தின் விவசாயி ஜீவானந்தம். நாகை மாவட்டத்தின் ஒட்டுமொத்த வறட்சியை கீழ்வேளூர் ஒன்றியம் பிரதிபலிக்கிறது.

''அடுத்த விவசாயம் செய்வதற்கு வரவிருக்கும் பருவமழைக்காக பத்து மாதங்கள் காத்திருக்க வேண்டும். அதுவரையில் இந்த வறட்சியை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?'' என்ற கேள்விக்கு பெண்களிடமிருந்து வரும் ஒரே பதில் ''தெரியலைங்க'' என்பது மட்டும்தான். ''எங்களுக்கு தெரிஞ்சது விவசாய வேலை மட்டும்தான். வேற வேலைக்குப் போகணும்னா இனிமேல் அதை பழகிட்டுத்தான் போகணும்'' என்கிறார்கள் ஊர் மக்கள். தங்கள் வாழ்க்கையின் ஒரே ஆதாரமான விவசாயம் பொய்த்துப் போனதால், இன்று தெருவில் வீசியெறியப்பட்ட குப்பையாகச் சீரழிந்து கிடக்கிறது இவர்களின் வாழ்க்கை.

சராசரியாக, ஒரு ஏக்கரில் நெல் பயிரிட 25,000 ரூபாய் செலவாகிறது. இதில் நேரடி விதைப்பிற்கு 2,000 ரூபாய், எந்திர நடவுக்கு 1,000 ரூபாய், களைக்கொல்லிக்கு 600 ரூபாய் - என அரசு தரும் மானியங்களைக் கழித்தாலும், ஏக்கருக்கு 20,000 ரூபாய்க்கு மேல் விவசாயிகள் கையிலிருந்து செலவழித்தாக வேண்டும். ''1,000 ரூபாய் செலவழித்து பட்டா, சிட்டா, அடங்கல் வாங்கிட்டு பயிர்க் கடன் கேட்டுக் கூட்டுறவு வங்கிக்கு ஓடினால், நாலுநாள் அலையவிட்டு அஞ்சாவது நாளில் 10 பேருக்கு மட்டும் கொடுத்துட்டுப் பணமில்லைன்னு கடையை மூடிருவான். அதன் பிறகு ஸ்டேட் பேங்க் மேனேஜரிடம் கெஞ்சினால், ஏக்கருக்கு 8,000 ரூபாய்தான் தருவாரு. மீதிப் பணத்தை மாத வட்டிக்கோ, மைக்ரோ பைனான்சிலோ வாங்கிச் சமாளிப்போம்'' என்று விவசாயம் செய்வதற்கு தாங்கள் படும்பாட்டை விவரிக்கிறார் வள்ளி என்ற பெண் விவசாயி!

பயிர்க் கடனாக ஏக்கருக்கு 25,000 ரூபாய்வரை கடன் தரலாம் என்பது பொதுவிதியாக இருந்தாலும், நெல் விவசாயம் லாப உத்திரவாதம் இல்லாதது என்பதால் 10.000 ரூபாய்க்கு மேல் எந்த வங்கியும் பயிர்க் கடன் தருவதில்லை. சிறு, குறு விவசாயிகளுக்கு வெறுங்கையை விரிக்கும் கூட்டுறவு வங்கிகள், பணக்கார விவசாயிகளுக்கும், அரசியல் செல்வாக்கு பெற்றவர்களுக்கும் பல இலட்சங்களை பயிர்க் கடனாக வாரிக் கொடுக்கத் தவறுவதில்லை. இதன் மூலம் பெரும்பான்மையான சிறு, குறு விவசாயிகளைக் கந்துவட்டி, மைக்ரோ பைனான்ஸ் கும்பலிடம் திட்டமிட்டே தள்ளிவிடுகிறது அரசு.

ஈக்விடாஷ் என்ற நுண்கடன் நிறுவனத்தில் 30,000 ரூபாய் கடன் வாங்கிய ஈஸ்வரி குடும்பம், தங்களது 2 ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிட்டிருக்கிறது.

**நுண்கடன் நிறுவனத்தில் வாங்கிய கடனுக்கான தவணையை வாராவாரம் கட்டுவதற்குத் திணறித் திண்டாடி நிற்கும் கீவளூர்-நேரு நகரைச் சேர்ந்த வள்ளி.**



''வாங்குன பணத்தையெல்லாம் நிலத்துலத்தான் போட்டோம். வர்ற வருமானத்துல கடனை அடைச்சுரலாம்னு மூக்குத்தி, தோடுகளை வித்து 21 தவணை அடைச்சுட்டோம். போனவாரத் தவணை கட்ட கையில காசில்ல. 420 ரூபா தவணையைக் கட்டினாத்தான் போவேன்னு எங்களை கூட்டி உக்கார வச்சுட்டான். என்ன மாதிரி நாலுபேரு காசில்லாம அழுவுறதப் பாத்துட்டு அக்கம் பக்கத்துக்காரங்க கொடுத்து உதவுனாங்க. அடுத்த தவணைக்கு என்ன ஆகுமோ தெரியல'' என்கிறார் கண்களில் பீதியுடன்!



கடன் தவணையைக் கட்டுவதற்கு வீட்டில் இருக்கும் பொருட்களை அடகு வைக்கிறோம் எனக் கூறும் திருவாரூர் மாவட்டம், கரப்பூர் கிராம விவசாயக் கூலித் தொழிலாளர்கள்.

குடவாசல் அருகிலுள்ள பரத்தியூர் கிராமத்தின் வீ.கீதா, விவசாய செலவுகளுக்காக தனது நிலத்தை முத்தூட் பைனான்சில் ஈடுவைத்து 25,000 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார். இதற்கு மாத வட்டி கட்டமுடியாத நிலையில், கிராம விடியல் என்ற நுண்கடன் நிறுவனத்தில் 15,000 ரூபாய் கடன்பெற்று முத்தூட் கடனுக்கு வட்டி கட்டியுள்ளார். ''இப்போ வைத்த விவசாயம் கருகிப்போனாலும், ஏற்கனவே வாங்கிய கடன்களுக்கு வட்டியும், தவணையுமா மாதம் 2,500 ரூபாய் நாங்க கட்டியாவனும். அதுக்கு இந்த பைனான்ஸ் காரங்களையும், மாத வட்டிக்காரங்களையும் விட்டா வேற வழியில்ல எங்களுக்கு'' என்று தனது எதார்த்த வாழ்க்கையின் அவலத்தை விளக்குகிறார் கீதா.

> டெல்டா மாவட்ட வறட்சி மற்றும் விவசாய மரணங்கள் குறித்து ஆய்வு செய்த உண்மை கண்டறியும் குழுவொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மாண்டுபோன ஒவ்வொரு விவசாயியும் நுண்கடன் நிறுவனங்களிடமிருந்து 120% வட்டிக்குக் கடன் வாங்கியிருப்பதாகக் குறிப்பிடுகிறது.

திருவாரூர் மாவட்டம் கரப்பூர் கிராமத்தின் 50 வயதான முத்துலட்சுமியோ, தான் ''சுய உதவிக்குழுவில் வாங்கிய கடன் தவணைக்காக, திருமணச் சீராகத் தனது பெற்றோர் போட்டுவிட்ட மூக்குத்தியை 7,000 ரூபாய்க்கு விற்றுவிட்டதாகவும், இனி வீட்டிலுள்ள சில்வர், பித்தளை பாத்திரங்களை உள்ளூர் அடகுக்கடையில் விற்றால்தான் அடுத்தடுத்த தவணையைக் கட்டமுடியும்'' என்று கூறுகிறார்.

கீழ்வேளூர் ஒன்றியத்தில் மட்டும் இதுபோல 160 குழுப் பெண்கள் ஈக்விடாஷ் நிறுவனத்தின் கடன் வலையில் சிக்கியுள்ளனர். ஈக்விடாஷ், கிராம விடியல், ஹெச்.எஃப்.சி., போன்ற நிறுவனங்கள் திருவாரூர், நாகை மாவட்டங்களில் மட்டும் 5,000 குழுக்கள் மூலம் ஒரு லட்சம் பெண்களைத் தங்களது கடன்வலையில் சிக்க வைத்துள்ளன. இந்த நுண்கடன் நிறுவனங்களைத் தனியார் சிறு வங்கிகளாக (SMALL BANKS) ரிசர்வ் வங்கி அங்கீகரித்துள்ளது. சிறுவிவசாயிகளுக்கு 8,000 ரூபாய்க்குமேல் பயிர்க்கடன் தரமறுக்கும் பொதுத்துறை, தனியார் வங்கிகள், இந்தத் தனியார் நிறுவனங்களில் பலநூறு கோடிகளை முதலீடு செய்துள்ளன. உதாரணமாக, தனியார் பயிர்க் காப்பீட்டு நிறுவனமான ஐ.சி.ஐ.சி.ஐ., ஈக்விடாஷ் நிறுவனத்தில் ரூ.105 கோடியை சமீபத்தில் முதலீடு செய்துள்ளது. நேரடியாக விவசாயிகளுக்கு கடன்கொடுத்துக் கிடைப்பதைவிட, அதிக வட்டியும், அசல் உத்தரவாதமும் இருப்பதுதான் இந்த முதலீடுக்குக் காரணம்.

நுண்கடன் வலைக்குள் சிக்கியிருக்கும் கீவளூர்-நேரு நகரைச் சேர்ந்த பெண்கள்.



இவை தவிர, மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து நடத்தும் மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் சுய

உதவிக் குழுக்களையும் இயக்கி வருகிறார்கள். கிராமத்துப் பெண்களை விவசாய வேலைகள் தவிர்த்து தையல், சிறு வியாபாரம் போன்ற சுயவேலையில் ஈடுபடுத்தும் நோக்கில் அமலாகிவரும் இத்திட்டத்தில், குழுப் பெண்களுக்கு வங்கிகளில் கடன்வசதி செய்து தருகிறார்கள். இவ்வாறு, நாகை மாவட்டத்தில் மட்டும் 15,000 சுயஉதவிக் குழுக்களில் 2,33,400 பெண்கள் இணைந்துள்ளதாக மாவட்டப் புள்ளிவிவரம் கூறுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் தமிழகக் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக வழங்குவது ரூ.4,000 கோடி என்று கூறுகிறது தமிழக அரசு. ஆனால், மகளிர் திட்டத்தின் கீழ் சுயஉதவிக் குழுக்களுக்கு பொதுத்துறை வங்கிகள் வழங்கியதோ 7,600 கோடிரூபாய்.

நேரடியாக விவசாயத்திற்கு வழங்கும் கடனை விட, விவசாயமற்ற வேறு வகையினங்களுக்குக் கடன் வழங்குவதிலேயே அரசு தீவிர அக்கறை காட்டி வருகிறது. இதன் விளைவாகவே, விவாயிகள் தங்கள் சராசரி வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மைக்ரோ பைனான்ஸ், சுயஉதவிக் குழு, கந்து வட்டி கும்பலின் கடன்வலையில் சிக்கி விடுகின்றனர். இந்தக் கடன் நெருக்கடிதான் டெல்டா விவசாயிகளின் மரணத்திற்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

டெல்டா மாவட்ட வறட்சி மற்றும் விவசாய மரணங்கள் குறித்து ஆய்வு செய்த உண்மை கண்டறியும் குழுவொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மாண்டுபோன ஒவ்வொரு விவசாயியும் நுண்கடன் நிறுவனங்களிடமிருந்து 120% வட்டிக்குக் கடன் வாங்கியிருப்பதாகக் குறிப்பிடுகிறது.

டெல்டாவில் எழவு விழுந்த பிறகு, பாவத்திற்குப் பரிகாரம் தேடுவதுபோல, கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன்களை மத்திய கால கடன்களாக மாற்றுவதாக அறிவித்த தமிழக அரசு, நுண்கடன் நிறுவனங்கள் உள்ளிட்டுத் தனியாரிடம் விவசாயிகள் பெற்றுள்ள கடன்கள் குறித்துக் கண்டுகொள்ளாமல் நழுவிக் கொண்டுவிட்டது. விவசாயிகள் செத்தாலும், தனியாரின் முதலீட்டுக்கும் இலாபத்திற்கும் பங்கம் வந்துவிடக் கூடாது எனக் கருதும் இந்த அரசுதான் மக்கள் நல அரசாம்!

● மாறன்

# விவசாயி வீட்டில் இழவு:


# யார் குற்றவாளி? இயற்கையா? அரசின் உதாசீனமா?

**சாகுபடி பரப்பு குறையக்கூடாது, உற்பத்தி குறையக்கூடாது என உத்தரவிடும் அரசு, விவசாயத்திற்கு அடிப்படையான பாசன வசதிகளை, நீர்நிலை பராமரிப்பைத் திட்டமிட்டு புறக்கணிக்கிறது, அழிக்கிறது.**

‘‘காவிரிக்காக கர்நாடகவோடு மல்லுக்கட்டுகிறோம். ரொம்ப சரி, ஆனால், இங்கே என்ன செய்கிறோம்?’’ - நாங்குடி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜீவானந்தனைச் சந்தித்து வறட்சியையும் விவசாயிகளின் சாவுகளையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, இப்படியொரு கேள்வியை அவர் என்னிடம் கேட்டார்.

‘‘காவிரி மற்றும் அதன் கிளை நதிகளின் வாய்க்கால்களும், டெல்டா மாவட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான ஏரிகளும் தூர் வாரப்படாமல் புதர்ச் செடிகள் மண்டியும், சிதிலமடைந்தும் கிடப்பது; தூர் வாருவது என்ற பெயரில் நடந்துவரும் ஊழல்; மேட்டூருக்குக் கீழே நீரைச் சேமித்து வைக்க போதிய எண்ணிக்கையில் தடுப்பணைகளோ, கதவணைகளோ இல்லாமல் இருப்பது; தமிழகத்தின் காவிரிப் படுகையில் நடந்துவரும் மணல் கொள்ளை’’ - என நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதில் தமிழக அரசு காட்டிவரும் அக்கறையின்மை, அலட்சியம் என்ற கிரிமினல்தனத்தைச் சாடுவதாக இருந்தது, அவரது கேள்வி.

செக்கானூர் கதவணை உடைந்து வீணாக வெளியேறும் காவிரி நீர்.



இந்தக் கேள்வி தமிழகம் முழுவதற்குமே பொருந்தக்கூடியது என்றபோதும், காவிரிப் படுகையைப் பொருத்தமட்டில் மிகுந்த முக்கியத்துவமுடையது. காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்படி மொத்த காவிரி நதி நீரில் தமிழகத்தின் பங்கு 419 ஆயிரம் மில்லியன் கனஅடி (டி.எம்.சி.) ஆகும். இதில், கர்நாடகா தமிழகத்திற்குத் தர வேண்டிய பங்கு 192 ஆ.மி.க.தான். மேட்டூருக்கு மேல் பகுதியில் கிடைக்கும் நீரின் அளவையும் சேர்த்தால், மேட்டூருக்கு ஆண்டொன்றுக்கு வந்து சேரும் நீரின் அளவு 217 ஆ.மி.க. மீதமுள்ள 202 ஆ.மி.க. நீரும் மேட்டூருக்குக் கீழே தமிழகத்தின் பகுதிகளில் கிடைக்கும் நீர் ஆகும். (ஆதாரம்: தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை வெளியிட்டுள்ள மேட்டூர் அணை பாசனப் பகுதி - பயிர் சாகுபடியும் நீர் வழங்கல் திட்டமும்-2013-14)

நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அமல்படுத்த கர்நாடகா மறுத்துவரும் இன்றைய நிலையில், தமிழகத்திலுள்ள காவிரிப் படுகையில் கிடைக்கும் நீரை முடிந்த அளவு சேமித்தும், சிக்கனமாகவும், திறம்படவும் பயன்படுத்திக் கொண்டால்தான், மேட்டூர் அணை பாசனப் பகுதியில் ஒரு போக சம்பா சாகுபடியையாவது உத்தரவாதப்படுத்த முடியும். ஆனால், தமிழக அரசின், ஆளுங்கட்சிகளின் செயல்பாடுகளோ இதற்கு நேர் எதிராகவே உள்ளது.

“சுமார் ஒரு கிலோமீட்டர் அகலம் கொண்ட கொள்ளிடம் ஆறு மழைக்காலத்தில் வெள்ள நீர் ஓடும் வடிகாலாகவே உள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே அணை எதுவும் இல்லாததால்,2013-ஆம் ஆண்டில் மட்டும் கொள்ளிடம் ஆற்றில் திறந்துவிடப்பட்ட சுமார் 20 டி.எம்.சி. தண்ணீர் நேராகக் கடலுக்குச் சென்றுவிட்டது. எனவே, தொழில்நுட்ப நிபுணர்களைக் கொண்ட குழுவை அமைத்து, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு” 2014-ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதி மன்றத்தில் ஒரு பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கு விசாரணையில், காவிரியின் துணை ஆறுகளில் 117 கோடி ரூபாய் செலவில் 61 சிறு அணைகளைக் கட்டத் திட்டமிட்டிருப்பதாகத் தமிழக அரசு தெரிவித்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இவற்றுள் எத்துணை அணைகள் கட்டி முடிக்கப்பட்டன, கட்டி முடிக்கப்பட்டவை எந்த அளவிற்குத் தரமாக உள்ளன என்பதெல்லாம் பெரும் புதிராகவே உள்ளன. குறிப்பாக, தமிழ்நாடு மூத்த வேளாண் பேரவையினர், “மேட்டூருக்குக் கீழே கல்லணை வரையிலும் இருபத்து மூன்று தடுப்பணைகள் கட்டத் திட்டமிடப்பட்டு, அதில் மூன்று தடுப்பணைகள் மட்டும்தான் இதுவரை கட்டப்பட்டுள்ளது என்றும், அப்படிக் கட்டப்பட்ட மூன்றில் செக்கானூர் தடுப்பணை கடந்த டிசம்பர் இறுதியில், அதாவது பல பத்தாண்டுகளில் காணப்படாத வறட்சி நிலவிய நேரத்தில் உடைந்துபோய், அரை டி.எம்.சி. தண்ணீர் வீணாகிப்போனதாக”க் குற்றஞ்சுமத்துகிறார்கள்.

கும்பகோணம் அருகே காவிரியின் கிளை நதியான அரசலாற்றில் கட்டப்பட்ட தடுப்பணை உடைந்துபோனதால், 2015-இல் பெய்த பெருமழையின் நீரையும் சேமிக்க முடியவில்லை. இந்த ஆண்டும் அந்தத் தடுப்பணை சீர்செய்யப்படவில்லை எனக் குற்றம் சுமத்துகிறார்கள், அப்பகுதி விவசாயிகள்.

**காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் ஆங்காங்கே தடுப்பணைகளைக் கட்டி பருவ மழைக் காலத்தில் கிடைக்கும் தண்ணீரைச் சேமித்து வைப்பதன் மூலம், 10 டி.எம்.சி. தண்ணீரைப் பெற முடியும் என்ற ஆலோசனையை தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை முன்வைத்து வருகிறது.**

மேட்டூர் அணையை மிக நீண்ட காலமாகத் தூர் வாராததால், அதன் முழுக் கொள்ளளவான 93.4 அடிக்கு நீரைச் சேமிக்க முடியாதென்றும், அணை அதன் முழுக் கொள்ளளவை எட்டும்போது அணையில் 74 அடி மட்டுமே நீர் தேங்கியிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

காவிரியின் கிளை நதியான வெட்டாறு கடலில் கலக்கும் இடத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தள்ளி ஆற்றின் வடிகாலில் ஒரு கதவணையை அமைப்பதன் மூலம் கீவளூர் பகுதியைச் சுற்றியுள்ள 50 கிராமங்களில் 25,000 ஏக்கரில் கோடைப் பயிர் செய்ய முடியும் என்றொரு யோசனையை விவசாயத் துறை அமைச்சர் தொடங்கி அதிகாரிகள் வரை பலர் இடத்தில் சொல்லிய பிறகும், அந்தத் திட்டத்தின் சாத்தியப்

ஆற்றுப் படுகைகளில் நடைபெறும் மணல் கொள்ளையால் ஆற்று வழித்தடம் பள்ளம், மேடாகி நீரோட்டம் தடைப்பட்டு வீணாகும் நீர். (கோப்புப் படம்)



பாடுகள் குறித்து ஆய்வு செய்யக்கூட மறுக்கிறது, தமிழக அரசு எனக் குற்றஞ்சுமத்துகிறார், நாங்குடியைச் சேர்ந்த விவசாயி ஜீவானந்தம்.



காவிரி-கட்டளைக் கால்வாயின் அவலமான நிலை.

காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் ஆங்காங்கே தடுப் பணைகளைக் கட்டி பருவ மழைக் காலத்தில் கிடைக்கும் தண்ணீரைச் சேமித்து வைப்பதன் மூலம், 10 டி.எம்.சி. தண்ணீரைப் பெற முடியும் எனக் கூறுகிறது, தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவையினர் வெளியிட்டுள்ள கையேடு.

இயற்கையின் வழியாகக் கிடைக்கும் நீரைச் சேமித்து வைக்க மறுப்பதில் மட்டுமல்ல, காவிரியின் நீர்வழித் தடங்களைப் பராமரிப்பதிலும் தமிழக அரசு பெரும் கிரிமினல் குற்றத்தையே இழைத்து வருகிறது. அதிலொன்று மணல் கொள்ளை. ஆற்று மணல் கொள்ளை ஒருபுறம் நிலத்தடி நீரை வற்றச் செய்துவிடுகிறது என்றால், இன்னொருபுறம் ஆற்றில் நீர் ஓடுவதைத் தடுத்துக் குட்டை போலாக்கி, எதற்கும் பலன் இல்லாமல் வீணடிக்கிறது.

“காவிரி நீர் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சென்றடைய வினாடிக்கு 7,000 கன அடி தண்ணீரைத் திறந்துவிட்டால் போதும் என்ற நிலையில், மணல் கொள்ளையால் ஆற்றின் வழித்தடம் பள்ளமும் மேடுமாகித் தண்ணீர் செல்வது தடைப்பட்டுப் போவதால், 10,000 கன அடி நீரைத் திறந்துவிட வேண்டிய நிலையில் பொதுப் பணித் துறை உள்ளது. இந்த வேறுபாடு - வினாடிக்கு 3,000 கன அடி நீர் - எதற்கும் பயன்படாமல் வீணாகிறது” எனக் கூறுகிறார், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிகாரி.

மணல் கொள்ளைக்கு அடுத்து காவிரியின் நீர் வழித் தடங்களைத் தூர் வாருவது என்ற பெயரில் நடந்து வரும் ஊழல். “ஐந்து இலட்ச ரூபாய்க்குள் இருக்கும் தூர் வாரும் வேலைகளை உள்ளூர் கட்சிக்காரர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கும் மேலே இருக்கும் வேலைகள் அமைச்சரின் மச்சான், மாமன் - என உறவு முறைகளை வைத்து அமைச்சரின் குடும்பமே எடுத்துக் கொள்கிறது. காண்டிராக்டு எடுப்பதில் இப்படியான தில்லு முல்லு என்றால், தூர் வாரும் வேலையோ கண் துடைப்பாகவே நடைபெறுகிறது. பத்து இலட்ச ரூபாய் வேலையில், ஒண்ணரை இலட்ச ரூபாய் பொக்லைன் மிஷினுக்கு, ஒரு இலட்ச ரூபாய் ஆபீசுக்கு, மீதியெல்லாம் காண்டிராக்டு எடுத்திருக்கும் கும்பல் சுருட்டிவிடும். எங்கள் ஊரில் இப்படித்தான் நடந்தது. நாங்கள் பொக்லைன் டிரைவருக்கும், மேனேஜருக்கும் சோறு கொடுத்து, படிக்காசும் கொடுத்து மேலும் இரண்டு கிலோ மீட்டர் வெட்டினோம்” என்கிறார், நாங்குடியைச் சேர்ந்த விவசாயி ஜீவானந்தம்.

இது மட்டுமல்ல, எப்போது தூர் வார வாருவார்கள் எனக் கிராம மக்களுக்கே தெரியாது. தண்ணீர் வருவதற்கு நான்கு நாட்கள் முன்னதாக, ராத்திரியோடு ராத்திரியாக வந்து வெட்டிவிட்டுப் போவார்கள். தாலுகா ஆபிஸில் இரண்டு பொக்லைன் மிஷின் இருந்தால், விவசாயிகளே டீசல் போட்டு உருப்படியாக வெட்டி விடுவோம் என்கிறார், அவர்.

3.37 இலட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் பாசனம் பெறும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் காவிரி-குண்டாறு இணைப்புத் திட்டம். இத்திட்டத்திற்கு 3,516 கோடி ரூபாய் செலவாகும் எனப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டாலும், இந்தத் திட்டம் இன்னும் காகித அறிக்கையாகவே இருந்து வருகிறது.

“நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்படும் தூர்வாரும் பணிகள் “பேட்ச் ஒர்க்” பார்ப்பது போல நடைபெறும். வாய்க்கால்களை முறையாகத் தூர் வாருவது பற்றி அரசியல்வாதிகள் மட்டுமல்ல, இப்பொழுதெல்லாம் குடியானவர்களும் அக்கறை கொள்வதில்லை” என்கிறார், வேளாண் துறையைச் சேர்ந்த இளநிலை அதிகாரி.

நீர் வழித்தடங்களைப் புதர்ச் செடிகள் அண்டாமல், மணல் திட்டுகள் உருவாகாமல் முறையாகப் பராமரிப்பது, நீர் தடையின்றி ஓடுவதற்கு அவசியமானது என்ற பொதுப் புரிதல் அனைவருக்கும் இருக்கும் என்றபோதும்,

காவிரி டெல்டாவைப் பொருத்தவரை இந்தப் பராமரிப்புப் பணி இன்னும் கூடுதலாகக் கவனம் கொடுத்துச் செய்ய வேண்டிய ஒன்றாகும்.

கல்லணைக்குக் கீழேயுள்ள டெல்டா பகுதியில் காவிரி 38 கிளை நதிகளாகப் பிரிந்து 724 கி.மீ. தூரத்திற்கு ஓடி, கடலில் கலக்கிறது. காவிரி மற்றும் அதன் கிளை நதிகளில் இருந்து பிரிந்து செல்லும் வாய்க்கால்களின் எண்ணிக்கை 25,228. இந்த வாய்க்கால்கள், ஏ வகுப்பு, பி வகுப்பு எனத் தொடங்கி ஜி வகுப்பு என ஏழு விதமாகப் பிரிக்கப்பட்டு, 28,360 கி.மீ. தூரத்திற்கு நீரை எடுத்துச் செல்லுகின்றன. (ஆதாரம்: தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை வெளியிட்டுள்ள மேட்டூர் அணை பாசனப் பகுதி கையேடு, 2016-2017, பக்.12)

டெல்டா பகுதி முழுவதுமே கடல் மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் அமையாத பூகோள காரணத்தால், அதாவது, 2,000 அடிக்கு ஒரு அடி வீதம் உயர்ந்து கிட்டதட்ட சம நிலையில் உள்ளதால், காவிரி, அதன் துணை நதிகள், வாய்க்கால்களில் ஓடும் நீர் மெதுவாகவே கடலை நோக்கிப் பாய்கிறது. இந்தப் புவியியல் காரணம், ஆற்று வழித் தடங்களையும் வாய்க்கால்களையும் முறையாகப் பராமரிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தினாலும், தமிழக அரசு கடந்த பல ஆண்டுகளாகவே அலட்சியமாகவே நடந்து வருகிறது. அதுவும் கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் நிலைமை படு மோசம் என்கிறார்கள் டெல்டா பகுதி விவசாயிகள்.

இந்த அலட்சியம் இரண்டு விதங்களில் விவசாயத்தை, விவசாயிகளை நேரடியாகப் பாதிக்கிறது. ஒருபுறம், தண்ணீர்ப் பற்றாக்குறை காலங்களில் நீர் சீராகப் பாய்வதற்கு ஏற்படும் தடைகளால் தண்ணீர் வீணாகிறது. பெருமழைக் காலங்களிலோ வாய்க்கால்கள் நிரம்பி, உடைப்பு ஏற்பட்டு, வயல்களுக்குள் புகுந்து விவசாயிகளுக்கு நட்டமேற்படுத்துகிறது. 2015-இல் வெள்ளத்தினால் டெல்டா மற்றும் கடலூர் பகுதி விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு 1,600 கோடி ரூபாய்.

> ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்கு மின்சாரம், சாலை வசதி உள்ளிட்ட கட்டுமான வசதிகள் எந்தளவிற்கு முக்கியமானதோ, அது போல விவசாயத்திற்குப் பாசன வசதி அடிப்படையானது. கார்ப்பரேட் முதலாளிகளுக்கு அடிப்படை கட்டுமான வசதிகளை இலவசமாகவோ, மானியமாகவோ செய்து கொடுத்து வரும் ஆட்சியாளர்கள், விவசாயிகளைத் தம் சொந்தக் கையை ஊன்றி கரணம் போடும்படிக் கை கழுவி விடுகிறார்கள்.

வெட்டாறு கடலில் கலக்கும் இடமருகே ஒரு கதவணையை அமைக்கக் கோரி வரும் நாங்குடி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜீவானந்தம்.



“டெல்டா பகுதியிலுள்ள வாய்க்கால்கள் அனைத்தும் முறையாகப் பராமரிக்கப்படாததால், அதன் மொத்த கொள்ளளவில் 60 முதல் 65 சத வீத நீரை மட்டுமே எடுத்துச் செல்லும் அளவிற்குத் திறன் குறைந்து போயுள்ளன. இந்தத் திறனை 80 முதல் 85 சதவீதமாக அதிகப்படுத்தினால், பெருமளவு நீரைச் சேமிக்க முடியும். இதற்கு வாய்க்கால்களை முழுமையாகச் செப்பனிட்டுப் பராமரிப்பதற்கு, ஆண்டுக்கு 200 கோடி வீதம் ஐந்தாண்டுகளில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினால் போதும்” என்கிறார், ஓய்வு பெற்ற வேளாண் அதிகாரி.

டெல்டா மாவட்ட வாய்க்கால்கள் மட்டுமல்ல, சென்னை தொடங்கி கன்னியாகுமரி வரையிலுள்ள ஏரிகளும், குளங்களும், ஆற்று வழித் தடங்களும் மணல் கொள்ளையாலும், ஆக்கிரமிப்புகளாலும் சீரழிந்து கிடப்பதை, 2015-இல் பெய்த பெருமழை அம்பலப்படுத்திக் காட்டியது. நீரைச் சேமித்து வைத்துப் பயன்படுத்திக் கொள்ள நமது முன்னோர்கள் உருவாக்கி வைத்துவிட்டுப் போன பழைய கட்டுமானங்களைச் சீரழித்ததோடு மட்டுமின்றி, புதிதாக உருவாக்குவதிலும் தமிழக அரசு அக்கறையற்றுதான் நடந்து வருகிறது என்பதற்குப் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, காவிரி-குண்டாறு இணைப்புத் திட்டம். கரூர் அருகேயுள்ள மாயனூரில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கதவணையிலிருந்து ஒரு ஈர்ப்பு கால்வாயை அமைத்து, வெள்ளக் காலங்களில் காவிரியில் பாயும் நீரை இக்கால்வாயின் வழியாகக் கொண்டு சென்று, அதனைக் குண்டாற்றில் இணைத்து, கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த 3.37 இலட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் பாசனம் பெறும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் காவிரி-குண்டாறு இணைப்புத் திட்டம். இத்திட்டத்திற்கு 3,516 கோடி ரூபாய் செலவாகும் எனப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டாலும், இந்தத் திட்டம் இன்னும் காகித அறிக்கையாகவே இருந்து வருகிறது.


கடந்த 2015-ஆம் ஆண்டு பெய்த பெருமழையால் கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தில் மூழ்கிப் போன பயிர்கள். (கோப்புப் படம்)

இது போல கடந்த தி.மு.க. ஆட்சியில் தயாரிக்கப்பட்ட திட்டமான தாமிரபருணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டமும் நடைமுறைக்கு வரவில்லை.

காவிரியின் முக்கிய துணை ஆறான பவானி நதியில் குறுக்கே கதவணைகளே இல்லை என்பதோடு, சிறுமுகை, சத்தியமங்கலம், பவானிசகார் உள்ளிட்ட 11 இடங்களில் கதவணைகள் கட்ட மைய அரசின் மரபுசாரா எரிசக்தித் துறை முன்வைத்த பரிந்துரைகளும் கண்டுகொள்ளப்படவில்லை என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

2012-இல் அமைக்கப்பட்ட காவிரி தொழில்நுட்பக் குழு, தடுப்பணைகளும் கதவணைகளும் கட்ட முன்வைத்த பரிந்துரைகள் மீது இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்கிறது மற்றொரு செய்தி.

ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்கு நிலம், மின்சாரம், சாலை வசதி உள்ளிட்ட கட்டுமான வசதிகள் எந்தளவிற்கு முக்கியமானதோ, அதுபோல விவசாயத்திற்குப் பாசன வசதி அடிப்படையானது. தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அடிப்படை கட்டுமான வசதிகளை இலவசமாகவோ, மானியமாகவோ செய்து கொடுத்து, அவர்களை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்துவரும் ஆட்சியாளர்கள், விவசாயிகளைத் தம் சொந்தக் கையை ஊன்றி கரணம் போடும்படிக் கைகழுவி விடுகிறார்கள்.

வெறும் 650 கோடி ரூபாய் முதலீட்டைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்த நோக்கியா நிறுவனத்திற்கு, அது தொடங்கப்பட்ட முதல் மூன்று ஆண்டுகளில் தமிழக அரசும், மைய அரசும் வாரிக்கொடுத்த பல்வேறு சலுகைகளின் மதிப்பு மட்டும் 10,000 கோடி ரூபாயாகும். கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளில் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட வரி விலக்கோ பல பத்து இலட்சம் கோடி ரூபாய்களைத் தாண்டுகிறது. இப்படி கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பொதுப் பணத்தை வாரிக்கொடுக்கத் தயங்காத ஆட்சியாளர்கள், 1,000 கோடி ரூபாய் முதலீடு செய்து, டெல்டா வாய்க்கால்களைச் சீரமைக்க மறுக்கிறார்கள். காவிரி-குண்டாறு இணைப்பு, தாமிரபரணி-நம்பியாறு இணைப்பு உள்ளிட்டு பல்வேறு திட்டங்களை மட்டுமல்ல, உரிய இடங்களில் கதவணைகள், தடுப்பணைகளை முறையாகக் கட்டிப் பராமரிப்பதில்கூட அக்கறையற்று இருக்கிறார்கள்.

இந்தியாவெங்கிலுமே விவசாயம் புறக்கணிக்கப்படுவதும், விவசாயிகள் மாற்றந்தாய் மனப்பான்மையோடு நடத்தப்படுவதும் அரசுகளின், ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றபோதும், விவசாயத்தைப் புறக்கணிப்பதில் தமிழக அரசோ இன்னும் மூர்க்கமாக நடந்துவருகிறது. ஆற்று மணல், தாது மணல், கிரானைட், நிலம் (ரியல் எஸ்டேட்) ஆகிய இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்கும் கும்பல்தான் ஆளுங்கட்சி உள்ளிட்டு அனைத்து ஓட்டுக் கட்சிகளிலும் நிரம்பியிருப்பதால், தலைமைச் செயலர் தொடங்கி தலையாரி வரையிலான அதிகார வர்க்கம், போலீசு அனைத்தும் இந்தக் கும்பலின் கையாளாக இருப்பதால், தமிழக விவசாயத்தின் அழிவை இந்தக் கும்பல் நாலுகால் பாய்ச்சலில் துரிதப்படுத்துகிறது. விவசாயத்திற்கு ஆதாரமான நீர் ஆதாரங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுவதை, புறக்கணிக்கப்படுவதை இந்தப் பின்னணியிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நிலையில், தமிழகத்திலுள்ள ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள் உள்ளிட்ட நீராதாரங்களைத் தூர்வாரிப் பராமரிப்பதற்கு 3,400 கோடி ரூபாய் ஒதுக்கப் போவதாகத் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு, ஆடு நனைகிறது என ஓநாய் அழுத கதையைத்தான் நினைவுபடுத்துகிறது.

● செல்வம்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

கட்டுப்படாத மிருகமாக வளர்ந்துவிட்ட போலீசு இந்தக் கொடூரங்களைத் திமிரோடு அரங்கேற்றியிருக்கிறது.

போலீசின் வெறியாட்டத்தைக் கண்டித்து, வியாசர்பாடி உள்ளிட்ட சென்னையின் பல பகுதிகளில் தன்னெழுச்சியாகத் திரண்டு சாலை மறியல் போராட்டங்களை நடத்திய மக்களின் மீது கொலைவெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்ட போலீசு, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்காகத் திரண்டு போராடிய மக்கள் மீதும், மதுரை,சேலம், கோவை நகரங்களில் பேருந்துக்காகக் காத்திருந்த மக்கள் மீதும் வெறியாட்டம் போட்டது. மெரினாவில்தான் இளைஞர்கள் வன்முறையில் இறங்கினார்கள் என்றால், ஒரே நேரத்தில் தமிழகத்தின் எல்லா பகுதிகளிலுமா வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற கேள்விக்கு ஆட்சியாளர்களாலும் போலீசாலும் விளக்கமளிக்க முடியவில்லை.

எதைச் சொல்லியும் தனது வெறியாட்டத்தை நியாயப் படுத்த முடியாமல் போலீசின் அண்டப்புளுகுகள் மேலும் மேலும் அம்பலப்பட்டு வருகின்றன. போலீசின் கோரமுகம் தமிழகமெங்கும் கிழிந்து தொங்குகிறது. திட்டமிட்டே கற்களைக் குவித்து வைத்து தாக்குதல் நடத்தியதோடு, கண்ணில் பட்டவர்களையும், அடைக்கலம் கொடுத்தவர்களையும், வாகனங்களையும் போலீசார் தாக்கிய கொடூரமும் இணையத்தின் வாயிலாக சந்தி சிரிக்கிறது. இவையெல்லாம் மார்ஃபிங் செய்யப்பட்டவை என்ற போலீசின் புளுகும், 7 அமைப்புகளுக்குத் தடை என்ற போலீசின் மிரட்டல்களும் புஸ்வாணமாகி விட்டன. நடுக்குப்பம் தாக்குதலை போலீசாராலும் அரசாலும் நியாயப்படுத்த முடியாமல் போனதால்தான், அவசரமாக மீன் மார்க்கெட் கொட்டகையை அரசு கட்டிக் கொடுத்துள்ளது.

போலீசின் அட்டூழியங்கள் பல்வேறு ஊடகங்கள், இணைய தளங்கள் வழியாகவும், பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் உண்மையறியும் குழுக்களின் வாயிலாகவும் நாளும் ஆதாரங்களுடன் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவையனைத்தும் போலீசு எவ்வளவு கீழ்த்தரமானது, எவ்வளவு கொடூரமானது என்பதை தமிழக மக்களுக்கு மீண்டுமொரு முறை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. தமிழகத்திலேயே இத்தகைய நிலைமை என்றால், காஷ்மீரில் எத்தகையதொரு பயங்கரவாத அடக்குமுறை நிலவும் என்பதைத் தமிழக மக்களுக்குப் புரிய வைத்துள்ளது.

இன்றைய அரசு கட்டமைப்பை நம்பாமல், ஜல்லிக்கட்டுக்கான போராட்டத்தை எப்படி நடத்த வேண்டுமென்ற அனுபவத்தைப் பெற்றுள்ள தமிழக மக்கள், போலீசு அடக்குமுறைகளைக் கண்டு ஓய்ந்துவிட முடியாது என்பதை உணர்த்தி, தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு ஆகிய அமைப்புகளும், மக்கள் உரிமை பாதுகாப்பு மையம், மக்கள் அதிகாரம் ஆகிய அமைப்புகளும் தாங்கள் செயல்படும் பகுதிகள் அனைத்திலும் வீச்சான பிரச்சாரத்துடன் தெருமுனைக் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றன.

''வருவோம், மீண்டும் வருவோம்! மெரினாவில் மீண்டும் எழுவோம்!'' – என போலீசின் அடக்குமுறைகளை அம்பலப் படுத்தியும், போராட அறைகூவியும் தோழர் கோவன் பாடிய பாடலை வினவு இணையதளம் வெளியிட்டது. உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் உதவியுடன் ம.உ.பா.மையத்தின் சார்பில் குழுக்கள் அமைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாக சட்டரீதியான உதவிகள் செய்துள்ளதோடு, தொலைபேசி தொடர்பு விவரங்கள் இணைய தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது. சென்னை மெரினா பகுதியில் நடந்த போலீசு அட்டூழியம் பற்றி வழக்கறிஞர்கள், செய்தியாளர்களைக் கொண்ட உண்மையறியும் குழுவின் அறிக்கையை மக்கள் அதிகாரம் 31.1.17 அன்று வெளியிட்டது. இதேபோல, மதுரை அலங்காநல்லூர், தமுக்கம், தத்தனேரி பகுதிகளில் நடந்த ஜல்லிக்கட்டுப் போராட்டத்தை போலீசார் கொடூரமாக ஒடுக்கியதைப் பற்றிய விவரங்களைக் கொண்ட உண்மையறியும் குழுவின் அறிக்கை கடந்த பிப்.2-ஆம் தேதி வெளியிடப்பட்டது. இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின்படி, குற்றவாளிகளான போலீசாரைக் கைது செய்து, அவர்களைப் பணிநீக்கம் செய்து தண்டிக்க வேண்டும்; இழப்பீட்டுத் தொகையை அவர்களது சம்பளத்திலிருந்து ஈடுசெய்ய வேண்டும் – என உண்மையறியும் குழுக்களின் பரிந்துரைகள் பத்திரிகையாளர் சந்திப்பில் வெளியிடப்பட்டன.

தமிழகத்தைப் போலீசு ராஜ்ஜியமாக்கத் துடிக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராக, தமிழகத்தை மெரினாவாக்கும் வகையில் போராட அறைகூவி தமிகமெங்கும் இவ்வமைப்புகளின் பிரச்சாரமும் போராட்டங்களும் தொடர்கின்றன.

● அன்பு



அலங்காநல்லூரில்...



கம்பத்தில்...



சென்னையில்...



கைது செய்யப்பட்ட பள்ளி மாணவர்கள்... (முகம் மறைக்கப்பட்டுள்ளது)

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.



# தமிழகத்தின் டெல்லிக்கட்டு!

